# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

| மலர்–16, இதழ் – 12<br>Volume - 16, Issue - 12 | கார்த்திகைத் திங்கள்<br>November 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|




உ

குருபாதம்



திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனம்

திருமுறைச் செப்பேடு கண்டருளிய 27 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

# மணிவிழா



"Delivered by India Post"

www.indiapost.gov.in


தொடர்ச்சியான
கால்வலி மற்றும் எரிச்சலை
சாதாரணம் என தவறாக
எண்ண வேண்டாம்
இது வெரிகோஸ்
வெயினின் ஆரம்ப
அறிகுறியாக இருக்கலாம்!
பிரத்தியேக
வாஸ்குலர் துறை
வடு, வலி, தையல்
இல்லா சிகிச்சை
சிகிச்சையின் நாளிலேயே
வீடு திரும்பும் வசதி
பார்வதி
மருத்துவமனை
044 2238 2248
www.parvathyhospital.com
241, GST Road, near MIT Bridge, Chromepet,
Chennai, Tamil Nadu 600044




Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com






**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

குலதெய்வ நாயகியே போற்றி! போற்றி!! உ சிவாயநம மயானக்கொள்ளை மாதாவே போற்றி! போற்றி!!



தமிழ்நாடு - மயிலாடுதுறை மாவட்டம், செம்பொன் ஒன்றியம்

22. முடி - திருச்சம்பள்ளி

**அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில்.**

# திருக்குடமுழுக்குப் பெருவிழா அழைப்பிதழ்

நாள் : விசுவாவசு ஆண்டு தை 18-ஆம் தேதி **(01.02.2026) ஞாயிறு**

நேரம் : காலை 8.00 மணிக்கு மேல் 9.30 மணிக்குள்.

இறையன்புடையீர் ! நல்வணக்கம்,

உலகில் அனைத்து ஜீவராசிகளுக்கு அன்னையாகவும், நம்குலத்தைக் காத்து அனைத்து வகையான செல்வங்களையும் வாரி வழங்கும் குலதெய்வ நாயகியாகவும் 22. முடி - திருச்சம்பள்ளி எனும் திருத்தலத்தில் கோயில் கொண்டு அருளாட்சி செய்துவரும் அருள்மிகு. அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலில் 10.03.2025 அன்று திருப்பணித் தொடக்க விழா நடைப்பெற்றது. திருப்பணி மற்றும் குடமுழுக்கு விழாவிற்கான செலவாக ரூபாய் ஒரு கோடி செலவாகலாம் என மதிப்பிடப் பெற்றுள்ளது.

கார்குல செயல்வீரர், திருப்பணிச் செம்மல், ஹோட்டல் மணிவிழா உரிமையாளர்

திரு. **K. செல்வக்குமார் பிள்ளை** அவர்களை திருப்பணிக்குழுத் தலைவராகக் கொண்டு அனைத்து திருப்பணிச் செயல்களும் குலதெய்வக் குடும்பத்தார்கள் அளிக்கும் நன்கொடை மூலம் வலிவும், பொலிவும், வசதியும் கொண்ட வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**01.02.2026 ஞாயிறன்று** அன்னையின் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா நிகழ்ச்சி நிரலில் உள்ளவாறு நடைபெற உள்ளது. அன்னையை தொன்று தொட்டு போற்றி வணங்கிடும் குலதெய்வக்குடும்பத்தார்களும், இறையன்பர்களும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெற்றிட **அன்புடன் அழைக்கின்றோம்.**

இங்ஙனம்...

**திருப்பணிக்குழுவினர் - அறங்காவலர்கள் - குலதெய்வக்காரர்கள் - கிராமவாசிகள்**

***நிகழ்ச்சி நிரல் :-***

| |
|---|
| தை மாதம் 14 ஆம் தேதி **28.01.2026 புதன்கிழமை முதல் ஆயத்த வழிபாடுகள்** நடைபெறும். |
| **29.01.2026 வியாழன்** மாலை 6.00 - 9.00 முத்தான அன்னைக்கு முதற்கால யாகசாலை வழிபாடு. |
| **30.01.2026 வெள்ளி** காலை 8.00 - 12.00 இடர்நீக்கும் இனிய தலைவிக்கு இரண்டாம் கால யாகசாலை வழிபாடு. |
| **30.01.2026 வெள்ளி** மாலை 6.00 - 9.00 மும்மாரி பொழியும் அங்காளிக்கு மூன்றாம் கால யாகசாலை வழிபாடு. |
| **31.01.2026 சனி** காலை 8.00 - 12.00 நான்மறை போற்றும் நாயகிக்கு நான்காம் கால யாகசாலை வழிபாடு. |
| **31.01.2026 சனி** மாலை 6.00 - 9.30 ஐங்கரனின் அன்னைக்கு ஐந்தாம் கால யாகசாலை வழிபாடு. |
| **31.01.2026 சனி** மாலை 6.30 - 8.30 தருமை சிவா குழுவினர் வழங்கும் இன்னிசை & பரத நாட்டியம் |
| **01.02.2026 ஞாயிறு** காலை 5.30 - 8.00 அகிலாண்ட கோடி அன்னைக்கு ஆறாம் கால யாகசாலை வழிபாடு |
| **01.02.2026 ஞாயிறு** காலை 8.00 - 9.30 **அனைத்து விமானங்களுக்கும், மூலஸ்தானத்திற்கும், மகாகும்பாபிஷேகம்** |
| **01.02.2026 ஞாயிறு** மாலை 4.00 - 8.00 **மகா அபிஷேகம் - அம்பாள் திருவீதியுலா** |

குறிப்பு :- 02.02.2026 திங்கள் முதல் தினசரி முற்பகல் 10.30 - 12.00 மண்டலாபிஷேகம் நடைபெறும். 22.03.2026 ஞாயிறு முற்பகல் மண்டலாபிஷேக நிறைவு விழாவும், மாலை நன்றி அறிவிப்புக் கூட்டமும், குடமுழுக்கு விழா சிறப்பு மலர் வெளியீடும், சிறப்புக் கச்சேரியும் நடைபெறும்.



விபரங்கள் அறிந்திட ... **K.செல்வக்குமார் பிள்ளை**, தலைவர் திருப்பணிக்குழு,

**9443740114 | 9344178382**

அறிவிப்பில் அகம் மகிழ்வோர் :

**வல்லம், காளிங்கராய மு.கணபதியாபிள்ளை - சுந்தராம்பாள் ஆச்சி குடும்பத்தினர்கள்.**


CELEBRATE LIKE A LANDLORD
DESTINATION
WEDDING
@
SR
Saradharam's
LAKSHMI VILAS
HERITAGE HOTEL
NEAR VEERANAM LAKE
+91 9442591456 / 94425 91466
lakshmivilasheritage@gmail.com
http://www.lakshmivilasresort.com/
71/2, SIVANKOIL STREET, NEDUNCHERRY T. PUTHUR TAMIL NADU

# KBF Biz-Connect KARKATHAR BUSINESS FORUM

(கார்காத்தார் தொழில் முனைவோர் பேரவை)

## CHIEF GUEST - MR.VIVEK ANAND

MANAGING DIRECTOR - CATERPILLAR INDIA,
PRESIDENT OF ICEMA, CHAIRMAN OF IESC, CHAIRMAN OF AMCHAM ,CHENNAI.

ANDHRA CHAMBER OF COMMERCE, CHENNAI ON SATURDAY 01/11/25




| President | Secretary | Treasurer |
|---|---|---|
| M.Balamurugan<br>98404 08549 | N.Ponnambalam<br>98408 97878 | V.Kannan<br>98413 01835 |



MR. PONNAMBALAM
FOTOSPACE - PHOTOGRAPHY



MR. SRIDHAR
INFODESIGN SYSTEMS & SOFTWARE - PC, LAPTOP, CCTV



MRS. BHARATHI VIVEK ANAND
SHARE TRADING



MR. VIVEK ANAND M.D
CATERPILLAR (GUEST SPEAKER)



MRS. HEMA NATHAN
GUEST



MR. KUMARESAN
CUSTOMS CLEARANCE



MR. ANAND
PERFECT DIE CASTINGS



MR. RAJASEKARAN
PASIKKU RUSIKKU CATERING




MR. PANNEERSELVAM
POWER CONDITIONING EQUIPMENTS, SOLAR (PENTAA POWER SOLUTIONS)




DR. ASOKAN
RUMI HERBALS



MR. THARANI
TEJOMAYA SOLUTIONS - GENSET, CHILLERS SALES & RENTAL



MR. MURUGESH
SRI KANDHAN TRADERS - CEMENT DEALER REAL ESTATE



MR. SARAVANAN
PREIPOLAR - INDUSTRIAL AUTOMATION SYSTEMS



MR. AGORAM
JP AIR CONDITIONERS - AC SALES & SERVICE



MR. SHANMUGAVELAYUTHAM
IPL TRANSFORMERS




MR. BALAGURU
AV DRIVETECH - INDUSTRIAL GEAR BOXES



MR. MANIKANDAN
GRANITE - LAYING & SALES.



MR. BALAJI
MANGAI INDUSTRIES - FABRICATION INDUSTRY



MR. NARAYANASAMI
GLOBAL TAX SOLUTIONS - TAX, ACCOUNT



MR. BALAMURUGAN
ENVIRO SERVICES - ENVIRONMENT SOLUTIONS



MR. GOPI
MARLEY FANS



MR. SAYON
FINANCIAL PRACTITIONER, INSURANCE



Santa Clara by DAC
TNRERA/35/LO/2844/2025
DATED 29.07.2025
www.rera.tn.gov.in
DAC
DREAM ASCEND CONQUER
STRICTLY NO OFFERS!
Except
LUXURY
LAUNCHING
3&4 BHK
INDEPENDENT VILLAS
From ₹1.3Cr.
PERUMBAKKAM
Near Sholinganallur
AMENITIES
GYM
INDOOR GAMES
MULTIPURPOSE HALL
SWIMMING POOL
TERRACE
WHY CHOOSE?
• Located in a fast-growing area, Santa Clara offers excellent connectivity to Medavakkam, Pallikaranai, Velachery, and OMR – combining city access with peaceful living.
• Well-connected via Velachery–Tambaram Road, Medavakkam Main Road, and 200 Ft Radial Road, with easy access to all mode of transport.
• The upcoming Metro Phase 2 (Sholinganallur Lake Metro & Semmenchery Metro) will boost connectivity and increase property value.
• Easy access to Medavakkam , OMR, ECR, vandalur Kelambakkam road.
• With strong connectivity and upcoming metro access is a rising real estate hotspot with high appreciation and rental demand.
• Well-planned layout with green spaces and amenities for a peaceful, secure community lifestyle.
Most Awarded Developer in the Recent Days
MALAR MAGUDAM 2023
PRIDE OF INDIA – 2022
Member CREDAI
FOR MORE DETAILS | VISIT OUR MODEL APARTMENT
93003 93003
www.dacdevelopers.com
110+ PROJECTS
4.5M+ SQFT CONSTRUCTION
3000+ HAPPY FAMILIES

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **“Chidambaram Spiritual Stay”**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு “Booking.com” மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/– மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

**இதழின் உள்ளே....**




சங்க நிகழ்வுகள்..........12–19

மணமகன் / மணமகள் தேவை..........33–36

இந்தியாவில் வரி வகைகள் – பகுதி 1.......... 37

சங்கப் பலகை..........41

சிறுவர் பகுதி ..........43–46



**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



அன்புச் சொந்தங்களுக்கு கார்காத்தார் ஒப்புரவின் இனிய வணக்கங்கள். குழந்தைச் செல்வங்களுக்கு குழந்தைகள் தின நல்வாழ்த்துக்கள்!

உலகின் மிக முக்கிய விருதான நோபல் பரிசு இயற்பியல், மருத்துவம், வேதியல், இலக்கியம் மற்றும் அமைதிக்கு என இவ்வருடம் வழங்கப்பட்டுள்ளது. உலக அமைதிக்கான பரிசு வெனிசுலாவின் 68 வயதான மரியா கொரினா மச்சாடோ பாரிகா அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. வெனிசுலா மக்களின் மக்களாட்சி உரிமைகளை மேம்படுத்தவும், சர்வாதிகாரத்திலிருந்து மக்களாட்சிக்கு நியாயமான மற்றும் அமைதியான மாற்றத்தை அடைவதற்காகவும் போராடுவதற்காக அமைதிக்கான நோபல் பரிசு, எதிர்க்கட்சியின் முக்கியத் தலைவருக்கான இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு நம் வாழ்த்துக்கள்!

ஜப்பானின் முதல் பெண் பிரதமராக 64 வயதான ட்ரம்ஸ் இசைக்கலைஞர் சனேடக்காய்ஷி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் முன்னாள் உள்துறை அமைச்சர். இவரை எதிர்த்து வேளாண்துறை அமைச்சர் ஷிஞ்சிரோ கொய்சுமி போட்டியிட்டார். இருவரும் ஆளும் கட்சியான லிபரல் ஜனநாயக கட்சியைச் சேர்ந்தவர்கள். ஜப்பானின் புதிய பிரதமருக்கும் நமது வாழ்த்துக்கள்!

நமது அண்டைநாடான தாய்லாந்தின் தற்போதைய மன்னர் வஜிராலங்காரின் அன்னை, 93 வயதான தாய்லாந்தின் முன்னாள் ராணி சிரிகிட் கிடியாகரா அக்டோபர் 26–ஆம் தேதி காலமானார். இவர் முன்னாள் தாய்லாந்தின் மன்னர் பூமிபால் அதுல்யதேஜின் மனைவியாவார். இந்த அரச தம்பதிகள் பொதுச் சேவைக்கென தங்களை அர்ப்பணித்தவர்கள். அதனால் ராணி சிரிகிட் 'தேசத்தாய்' என மக்களால் போற்றப்பட்டவர். ஓராண்டுக்கு தாய்லாந்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

சிறந்த மேலாண்மை கல்வி நிறுவனங்கள் பட்டியலில் இந்தியாவின் மூன்று ஐ.ஐ.எம். கல்லூரிகள் இடம்பிடித்துள்ளன. லண்டனில் உள்ள குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் என்னும் கியூ.எஸ். அமைப்பு ஆய்வு செய்து ஆண்டுதோறும் தரவரிசைப்பட்டியல் வெளியிட்டு வருகிறது. ஒட்டுமொத்த தர வரிசைப்பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 14 மேலாண்மை கல்வி

நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. அவைகளுக்கு நமது வாழ்த்துக்கள்!

டில்லியில் நடந்த பாரா தடகளப் போட்டிகளில் இந்தியா சாதனை புரிந்துள்ளதாக நமது பிரதமர் விளையாட்டு வீரர்களைப் பாராட்டியுள்ளார். உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் 12 ஆவது சீசனில், இந்திய வீரர்கள் 6 தங்கம், 9 வெள்ளி, 7 வெண்கலம் என 22 பதக்கங்கள் வென்று பதக்கப் பட்டியலில் 10 ஆவது இடம் பிடித்தது. முதன் முறையாக இந்தியா 20 பதக்கங்களுக்கு மேல் வென்று உள்ளது பாராட்டுக்குரியது.

நைஜீரியாவில் நடைபெற்ற பாரா பாட்மின்டனில் இந்தியாவின் பிரமோத் பகத் 3 தங்கங்களை வென்றுள்ளார். இத்தொடரில் இந்தியாவுக்கு 6 தங்கம் 5 வெள்ளி 16 வெண்கலம் என 27 பதக்கங்கள் கிடைத்துள்ளன. அனைத்து விளையாட்டு வீரர்களையும் மேன் மேலும் வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துகிறோம்!

வாசகர்கள் அனைவருக்கும் மற்றும் அனைத்து கார்குலச் சொந்தங்களுக்கும் இனிய கார்த்திகை தீப ஒளி வாழ்த்துக்கள்!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
*என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.*

***- கார்காத்தார் ஒப்புரவு***

## தருமையாதீன குருமகா சந்நிதானம் அவர்களின் மணி விழா - வாழ்த்துரை

சீர்பெற்ற பண்புகட்கும் செம்மாந்த குணங்களுக்கும்
பேர்பெற்ற மறைஞான சம்பந்தம் பிள்ளைக்கும்
அலர்மேல் மங்கை அம்மையார்க்கும் அருமகவாய்
கார்குலத்தில் பிறந்திட்ட கண்ணான நன்மணி
கடலூர் மாவட்டம் ஏற்றமிகு எருக்கத்தம்
புலியூரில் பிறந்திட்ட எழிலான திருமணி
இற்றைநாள் மணிவிழா காணுகின்ற குருமணி!
இளமைத் துடிப்புடைய இருபத்து மூன்றாம்
அகவையிலே இல்லற வாழ்வினை இதயத்தில்
எண்ணாமல் தூயநல் துறவற வாழ்வினை
ஆன்றவிந்து அடங்கிய ஆசானாய், அகிலத்தோர்
அனைவரும் வணங்கிடும் அருமை குருவான
இருபத்து ஆறாவது குருமணியின் ஆசிபெற்று
அடுத்தடுத்து தீட்சைகளை அன்புடனே பெற்றதோடு
மௌன குருசாமி தம்பிரான் என்னும்
தீட்சா நாமமும் கொண்டே திருவையாறு
திருச்சி போன்ற தலங்களில் இறைப்பணியை
இனிதே செய்தார் நம் குல குருமணி!
குருவருளும் திருவருளும் ஒருங்கே அமைந்து
சமயப்பணி சமுதாயப் பணிதனை சலிப்பின்றி
செய்பவர் தருமை திருமடத்தின் உற்சவ
மூர்த்தியாய் இந்தியத் திருநாடு மட்டும்
அல்லாமல் உலகநாடுகள் பலவற்றிற்கும் தரணியில்
சைவத்தைப்பரப்ப உவப்புடனே சென்று வந்தார்
ஆதீனப் பொறுப்பேற்ற நாள்முதல் ஆன்மீகப்
பணிக்காக அயராது உழைத்து திருமுறை
செப்பேடு கண்டெடுத்தவர் நம் குருமணி! எண்ணிலா
கோயில்களுக்கு அழகாய் குடமுழுக்குப் பணியினை
ஏற்று நடத்தியவர்; குருநாதர் அவதார இல்லந்தனை
கோயிலாக மாற்றி இப்பாரினுக்கு அளித்தவர்;
அனைத்துலக ஆறாவது சைவசித்தாந்த மாநாட்டை
அகிலமே அதிசயிக்கும் வண்ணம் அருமையாய்
நடத்தியவர் நம் குருமணி! நம்குல குருமணிகட்கு
மகத்தான மணிவிழா! மனதார வணங்குவோம்!
மண்டியிட்டு வணங்குவோம்! முத்துவிழா, பவளவிழா,
வைரவிழா, நூற்றாண்டுவிழா குருமணிகள் கண்டிடவும்
அதனை அகிலம் கண்டு அருளாசி
பெற்றிடவும் திருச்சிற்றம்பலவனின் அருள் என்றும்
துணைநிற்க வணங்கி மகிழ்கின்றோம்

**கார்காத்தார் ஒப்புரவு**
**சென்னை கார்காத்தார் சங்கம்.**

## சங்க நிகழ்வுகள்

### சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர்

சங்கத்தின் செயற்குழு கூட்டம் சங்க கட்டிட வளாகத்தில் 26–10–25 திருமதி. ம. விஜயாள் திருமதி. G. கிருஷ்ணவேணி இணைந்து பாடிய தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

சங்க செயற்குழு உறுப்பினர் திரு. E. இளையராஜா அவர்களது தந்தையார் திரு. S. இளங்கோவன், பூர்வீகம் வல்லம் படுகை, வயது 73 அவர்களது மறைவுக்கும் திரு. நெய்வேலி மண்டலச் செயலாளர் C. இராமசுப்ரமணியன் அவர்களது மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை சங்க செயலாளரால் வாசிக்கப்பட்டு சங்கத்தின் பிற நிகழ்வுகளும் விவரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

வரவு, செலவு மற்றும் கையிருப்பு விவரத்தினை பொருளாளர், குழுவுக்கு சமர்ப்பிக்க குழு ஏற்றுக்கொண்டது.

கும்பகோணத்தில் நடந்து முடிந்த கார்குல மகளிர் சங்கமம் நிகழ்ச்சியில் வெகு சிறப்பாக அர்ப்பணிப்பு உணர்வுடன் பணி ஆற்றியதற்கு பாராட்டும் வகையில் திருமதி. கலையரசி ராஜசேகரன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. வாழ்க வளமுடன்.

மாநில கூட்டமைப்புக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. பணி மேலும் சிறக்க வாழ்த்துக்கள். வாழ்க வளமுடன்.

மனித நேயம் திரு. T.N. முத்துக்குமரசாமி பிள்ளை அவர்கள் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களுக்கு ஆற்றி வரும் தொடர் சமுதாய தொண்டிற்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. வாழ்க வளமுடன்.

தீபாவளியை முன்னிட்டு கார்குல மகளிர் சேவை குழுவும் நங்கநல்லூர் சங்க மகளிரணியும் இணைந்து பழைய பல்லாவரம் அருகில் வசிக்கும் நரிக்குறவர் குடும்பங்களுக்கும் இருளர் இன குடும்பங்களுக்கும் மாற்று திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் என சுமார் 200 நபர்களுக்கு போர்வை, புடவை, புது துணிகள், காதுப்பட்டிகள், தீபாவளி பலகாரங்கள் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் பங்கு கொண்ட மகளிர் அனைவருக்கும் சங்கத்தின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள், பாராட்டுகள் சமுதாயப்பணி மேலும் தொடரட்டும்.

அண்ணாநகர் மற்றும் போரூர் சங்கத்தினர் ஆண்டு விழா நிகழ்ச்சியில் முன்னணி மருத்துவர்களை கலந்து கொள்ள செய்து ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை மேலும் ஊக்குவித்ததற்கு நன்றி, பாராட்டுகள்.

சங்கத்தின் 38–வது ஆண்டுவிழாவினை சிறப்பாக நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. R. தில்லை கோவிந்தன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவுற்றது.

- G. சரவணன்,

தலைவர்.

### அண்ணாநகர் :

சங்ககூட்டம் 12–10–2025 அன்று அண்ணாநகர் ஆடிட்டர் திரு. கே. முத்தையா அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றது. தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் கூட்டத்தை தொடங்கி வைத்து ஆண்டு விழா சிறப்பாக நடத்திய செயற்குழு உறுப்பினர்கள் எல்லோருக்கும் நன்றியை தெரிவித்தார்கள்.

ஆண்டு விழாவின் வரவு செலவு கணக்கை தலைவர் அவர்கள் சமர்ப்பிக்க, செயற்குழு அதை ஏகமனதாய் ஏற்றுக்கொண்டது. 2026 மாதாந்திர

காலண்டர் செலவை ஏற்றுக்கொண்ட பொருளாளர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், விழாவில் எல்லோருக்கும் வாட்டர் பாட்டில் வழங்கிய இளங்கோ வாசுதேவன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இளம் வயதில் கலைமாமணி விருது பெற்ற கவிஞர் வி. விவேக் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

வி. இரவிக்குமார், ஆர். முருகன் ஆகிய இருவரையும் துணைச் செயலாளராக்க முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது.

ஆண்டு விழாவில் பரிசுப்பை போட உதவிய திரு. எஸ். பாலபிரகாஷ், திரு. டி. தியாகராஜன், திரு. ஆர். முருகன் அவர்களுக்கும், பேனர், ஸ்டேஜ் டெக்கரேஷனுக்கு உதவிய திரு. கண்ணன், திரு. இளங்கோ, திரு. இரவிக்குமார், விளையாட்டு போட்டியில் பரிசு வழங்கும் பொறுப்பை ஏற்று செய்த திரு. அறிவொளி, திரு. இராஜேந்திரன், திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், முன்னாள் தலைவர் திரு. மனோ தியாகராஜன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

நிறைவாக திரு. ஜி. கண்ணன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

**அண்ணா நகர் சங்கத்தின் 18-ம் ஆண்டு நிறைவு விழா** 5-10-2025 அன்று அண்ணாநகர் வி.என்.எஸ் மகாலில் தொடங்கியது. திருமதி. மங்களம் கிருஷ்ணமூர்த்தி திருமதி. கமலா நடராஜன், திருமதி. ஜெயந்தி இராஜேந்திரன், திருமதி. சாந்தி பாலசுப்பிரமணியன், திருமதி. ரேவதி நாராயணசாமி, திருமதி. ஞானசக்தி ஆனந்த கணபதி ஆகியோர் குத்து விளக்கேற்ற மங்களகரமாக விழா ஆரம்பமாகியது.

மாலை 3.00 மணிக்கு போட்டிகளுக்கான முன்னேற்பாடுகளை இரண்டாம் தளத்தில் திரு. வி. ஞானக்குமார், திரு. பா. அறிவொளி, திரு. ஆர். பிரபாகரன், திருமதி. மாலதி ஞானக்குமார், திருமதி. சுதா திலீப், திருமதி. லெஷ்மி பிரபாகரன், திருமதி. ஞானக்குமாரி, திருமதி. பாரதி மோகன், திரு. ஆர். முருகன் ஆகியோர் செய்து 3.30 மணிக்கு குழந்தைகளின் விளையாட்டு போட்டிகள் ஆரம்பமாகியது.

வரவேற்பில் திரு. எஸ். சிவப்பிரகாசம், திரு. வி. இராஜசேகரன், திரு. கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் அமர்ந்து வந்தவர்களை வரவேற்கவும் பதிவேட்டில் வந்தவர்களை பெயர் எழுதி கையொப்பமிட வைத்துக்கொண்டு இருந்தார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் பொதுக்குழு தொடங்கியது. தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியதும், என். ஆனந்த கணபதி அவர்கள் செயலாளர் உரையை பேசினார்கள். பொருளாளர் அறிக்கையை திரு. ஜி. பாலசுப்பிரமணியன் அவர்கள் விபரமாக வாசித்தார்கள்.

அண்ணாநகர் அமுதசுரபி அறக்கட்டளை தலைவர் திரு. டி. தியாகராஜன் அவர்கள் அறக்கட்டளை பற்றியும் செயலாளர் திரு. சி.எஸ். நாராயணசாமி இந்த வருட செயல்பாடுகளைப் பற்றியும் அறக்கட்டளையின் வரவு செலவு கணக்குகளை திரு. பா. அறிவொளி அவர்கள் சமர்ப்பித்தார்கள். சங்கத்தின் பொருளாளர் அறிக்கைக்கும், அறக்கட்டளையின் பொருளாளர் அறிக்கைக்கும் பலத்த கரவொலி மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டது.

வருங்கால தலைவர்களை உருவாக்கும் நோக்கில் பொறியாளர் திரு. ஆர். முருகன் அவர்களை முதன் முதலாக மேடையேற்றி பேச வைத்து ஊக்கப்படுத்தப்பட்டது.

மாநில கூட்டமைப்பின் தலைவர் திரு. கே.கே.ஆர். சுரேஷ் அவர்கள், அண்ணாநகர் சங்கம் சிறப்பாக செயல்படுவது பற்றியும், மாநில கூட்டமைப்பின் செயல்பாடுகள் பற்றியும் விளக்கமாக பேசினார்கள். தலைவர் அவர்களுக்கு செயலாளர் என். ஆனந்தகணபதி சால்வை அணிவித்து நினைவு கேடயம் வழங்கி சிறப்பித்தார்.

மாநில கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், சென்னை கார்காத்தார் சங்கத்தின் செயலாளரும், ஒப்புரவு இதழின் வெளியீட்டாளருமான திரு. கைலை. சண்முகம் அவர்கள், சங்கத்திற்கு இளைஞர்கள் வந்து பொறுப்பேற்று வேலை செய்ய வேண்டும் என பேசினார்கள். பொதுச் செயலாளர் அவர்களுக்கு துணைத் தலைவர் ஏ. இராஜேந்திரன் அவர்கள் சால்வை அணிவித்து நினைவு கேடயம் வழங்கி சிறப்பித்தார்கள்.

சிறப்பு விருந்தினர் பேராசிரியர் டாக்டர் திரு. கே. நடராஜன், மூத்த சிறுநீரக மருத்துவர், ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ கல்லூரி அவர்கள் பேசினார்கள். சங்கத்தின் செயல்பாடுகளை சமூக வலைத்தளங்கள் வழியாகவும் கொண்டு சென்றால் தான் இளைஞர்கள் ஈடுபாட்டுடன் சங்கத்திற்கு வருவார்கள் எனவும், வயது உயரத்திற்கேற்ற எடையை கடைபிடிக்க முயலவேண்டும் எனவும், ரோபோட்டிக் மூலம் அறுவை சிகிச்சைகள் எவ்வாறு துல்லியமாக செய்யப்படுகிறது எனவும் பேசினார்கள். பார்வையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கும் விளக்கமாக பதில் அளித்து

பேசினார்கள். டாக்டர் அவர்களுக்கு திரு. சி.எஸ். நாராயணசாமி அவர்கள் சால்வை அணிவித்தும், திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் நினைவு கேடயத்தை வழங்கியும் சிறப்பித்தார்கள்.

அடுத்து ஆதிவ் கருத்தரித்தல் மற்றும் மகப்பேறு மருத்துவமனையின் டாக்டர் எஸ்.ஆர். சுபஸ்ரீ அவர்கள் பெண்களுக்கான உடல் பிரச்சினைகள் குறித்தும், சில சுய பரிசோதனைகளை எப்படி மேற்கொள்வது எனவும், கான்சர் நோய் பற்றியும் அதை எப்படி தடுப்பது பற்றியும் எளிமையாக விரிவாக எடுத்து பேசினார்கள். நம் இன மகளிர் தங்கள் மருத்துவ சந்தேகங்களை தன்னிடம் எப்போதும் கேட்கலாம் என்று தெரிவித்தார்கள். டாக்டர் சுபஸ்ரீ அவர்களுக்கு டாக்டர் திருமதி. ஞானவதி அசோகன் அவர்கள் சால்வை அணிவித்து நினைவு கேடயம் வழங்கி சிறப்பித்தார்கள்.

செயலாளர் எழுதிய "சென்னை டு ஆம்ஸ்டர்டாம்" பயணக்கட்டுரை புத்தகத்தை தலைவர் கே.கே.ஆர். சுரேஷ் அவர்கள் வெளியிட சென்னை மண்டலத் தலைவர், "நான் ஒரு ஐஏஎஸ் அகடமி" இயக்குனர் திரு. ஜி. தியாகராஜன் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

சங்கத்தின் 18–ம் ஆண்டு நிறைவு விழா மலரை பேராசிரியர் முனைவர் திரு. கு. விவேகானந்தன் அவர்கள் வெளியிட ஆடிட்டர் திரு. சி.எஸ். நாராயணசாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

ஒய்.எம்.கே.ஏ. நங்கநல்லூர் சங்கம், போரூர் சங்கம், கே.பி.எப்.ஈ.சி.ஆர் சங்கத்திலிருந்து வந்த பொறுப்பாளர்களுக்கும், ஒப்புரவு பொறுப்பாளர்களுக்கும் சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது. நிறைவாக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர் சிறுமிகளுக்கும், போட்டியில் வெற்றி பெற்ற பெரியவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. வந்திருந்த எல்லோருக்கும் சிறப்பான இரவு உணவு அளிக்கப்பட்டது. வந்திருந்தவர்களுக்கு நினைவு பரிசாக ஆண்டுமலர், மான்மார்க் குடை, திருவாசகம் புத்தகம், **2026** க்கான மாதாந்திர காலண்டருடன் கூடிய பை வழங்கப்பட்டது.

– ஜெ. கோபாலகிருஷ்ணன்,

தலைவர்.

**9940461906**

## புதுச்சேரி :

02–10–2025 அன்று புதுச்சேரி அரும்பார்த்தபுரம், திரு. T. விவேகானந்தன் அவர்கள் இல்லத்தில் அக்டோபர் மாதக்கூட்டம் நடைபெற்றது. திரு. T. விவேகானந்தன் தலைமை ஏற்று வரவேற்று பேசினார்கள். ஆண்களுக்கான பரிசு திரு. T. விவேகானதன் அவர்களுக்கும், பெண்களுக்கான பரிசு திருமதி. லட்சுமி ரவிச்சந்திரன் அவர்களுக்கும் கிடைத்தது. கூட்டத்திற்கு சிறப்பான ஏற்பாடு செய்து விருந்தோம்பலும் செய்து தந்த குடும்பத்தினர் திரு. T. விவேகானந்தன் & திருமதி. விருதாம்பிகை தம்பதியினருக்கு உறவுகள் சால்வை அணிவித்து பாராட்டினார்கள். செப்டம்பர் மாத கூட்டத்தில் புதுச்சேரி கார்காத்தார் சங்கத்திற்கு **2025 – 2028** ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளை தேர்வு செய்ய தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட திரு. G. ஞானசேகரன் அவர்கள் தேர்தலுக்கான ஏற்பாடுகளை விவரமாக கூறினார். மேலும் **12–10–25** அன்று கீழ்க்கண்ட நிர்வாகிகள் போட்டியின்றி தேர்வானதாக அறிவித்தார்கள்.

J. ராஜன்பாபு, **9600968628**, தலைவர்

S. தமிழ்ச்செல்வன், **9487758514**, செயலாளர்

S. இராமலிங்கம், **9894378883**, பொருளாளர்

A. சுந்தரவள்ளி, **9486267327**, மகளிர் அணி தலைவி

C. ஜெயலட்சுமி, **9750579911**, மகளிர் அணி செயலாளர்

T. மலர்க்கொடி, **9442158514**, மகளிர் அணி பொருளாளர்

J. ராஜன்பாபு,

தலைவர்.

**9600968628**

## சீர்காழி :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் **4–10–25** அன்று சங்கக் கட்டிடத்தில் தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. **28–09–25** அன்று ஞாயிற்றுக்கிழமை ஜெயங்கொண்டம் ஆரோக்கிய மஹாலில் நடைபெற்ற மாநில அளவிலான அமைப்புச் செயலாளர் தேர்தல் மற்றும் பொதுக்குழுக் கூட்டத்தில் சங்கத்தின் சார்பாக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டோம்.

K. ஜெயச்சந்திரன்,

தலைவர்.

## மணிக்கிராமம் :

சங்கத்தின் கூட்டம் **04–10–25** சிவன் கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு துவங்கியது. இறைவணக்கத்துக்கு பிறகு கௌரவத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்க

செயலர் திரு. T. கபிலன் சென்ற மாத அறிக்கையை வாசிக்கவும் பொருளர் திரு. S. பரமநாதன் வரவு செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது.

சங்க தலைவர் திரு. G. அன்பழகன் முன்னிலை வகித்து பேசுகையில் சங்கத்தை ஏற்று நடத்திட புதியவர்கள் ஆர்வமுடன் பங்கேற்க வரவேண்டும் எனவும் கூட்டத்திற்கு வரும் போது பெற்றோர்கள் தனது இளைஞர்களை தவறாமல் அழைத்து வர வேண்டும் என வலியுறுத்தி பேசினார்கள். சீர்காழி மண்டலத்திற்கு மணிக்கிராமம் சங்கத்தை சேர்ந்த திரு. M. சிங்காரவேலன் அவர்களை போட்டியின்றி மண்டல தலைவராக தேர்வு செய்தமைக்கு கிளை சங்க பொறுப்பாளர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம். நாட்டு பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,

தலைவர்.

## இளந்தோப்பு :

21–09–2025 அன்று சங்க கூட்டம் சிவன் கோயில் வளாகத்தில் நடைபெற்றது.

தலைமை : V. ராஜசேகர் பிள்ளை, முன்னிலை : S. சீனுவாசன் பிள்ளை, சிவன் கோவில் நவராத்திரி விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அடுத்து வரும் கந்தசஷ்டி மற்றும் திருக்கல்யாணம் செய்ய முடிவு செய்யப்பட்டது. நன்றியுரை : V. குருநாதன் பிள்ளை கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

V. குருநாதன்

செயலாளர்

## செம்பனார் கோவில் :

சங்க கூட்டம் 06–10–2025 அன்று சங்க தலைவர் கி. இராமநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நமது சங்க மூத்த உறுப்பினர் திரு. சீத்தாராமன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் இறைவணக்கம் திரு. தாமரைச்செல்வி அவர்களும், வரவேற்பு திரு. S. ஜவகர் பிள்ளை அவர்களும், சென்ற மாத கூட்டறிக்கை திரு. குரு. முத்துகுமார் வாசிக்க, வரவு / செலவுகளை திரு. சி. செல்வராஜ் பொருளாளர் கூற கூட்டம் இனிதே தொடங்கியது.

சங்க தலைவர் அவர்கள் பேசுகையில் கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார் அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள். நடந்து முடிந்த மாநில சங்க பொறுப்பாளர்களுக்கும், வாழ்த்துகள் சங்கத்தின் சார்பாக கூறினார்கள். பொதுக்குழு கூட்டத்தில் நடந்த விவாதங்கள் குறித்து சங்க உறுப்பினர்களிடம் எடுத்துரைத்தார்கள். நமது மண்டலத்திற்கு மீண்டும் மண்டல தலைவராக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளேன் என்றும், மண்டல செயலாளராக திரு. இராமசெல்வன் அவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார்கள் என்றும் கூறினார்கள். எங்கள் சங்க சிரிப்பொலி மன்னன் திரு. மதியழகன் அவர்கள் நகைச்சுவை மற்றும் சிந்திக்கவும், சிரிக்கவும் கூடிய கதை கூறி அனைவரின் பாராட்டுகளை பெற்றார்.

திரு. A.M. சேகர் பிள்ளை அவர்கள் பேசுகையில் ''சிந்திக்கும் ஆற்றல்'' என்ற தலைப்பில் பல உதாரணங்களை கூறி அனைவரும் பயன்பெறும் வகையில் எடுத்துரைத்தார்கள்.

திருமதி.தாமரைச்செல்வி அவர்கள் பேசுகையில் ''உணவே மருந்து'' என்ற தலைப்பில் எல்லோருக்கும் ஏற்பட கூடிய ''சளி'' தொந்தரவை நீக்கும் வகையில் ''கற்பூரவள்ளி'' ரசம் வைக்கும் முறையையும், அதன் பயன்களையும் எடுத்துரைத்தார்கள்.

திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் பேசுகையில் கூட்டம் ஏற்று நடத்திய திரு. சீத்தாராமன் பிள்ளை அவர்கள் குடும்பம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள் அவர்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து கொண்டார்கள். செம்பனார் கோவில் கார்குல சங்கம், பரசலூர், செம்பனார் கோவில் என்று இரண்டாக பிரிந்த போது, ''மனம் பேசுகிறது'' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதி வீடு வீடாக நானும் திரு. சீத்தாராமன் பிள்ளை அவர்களும் கொடுத்துள்ளோம். நமது மண்டல தலைவராக மீண்டும் தேர்ந்து எடுக்கப்பட்ட திரு. M.C.K. இராமநாதன் பிள்ளை செயலர் திரு. இராமசெல்வம் இருவருக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள். இருவருக்கும் சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. மகளிர் அணி தலைவி அவர்கள் வைத்த வேண்டுதலை ஏற்று வரும் டிசம்பர் மாதம் புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்து எடுத்துக் கொள்வோம் என்றும் கூறினார்கள். திரு. சீத்தாராமன் பிள்ளை அவர்கள் செம்பனார் கோவில் சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 5000 சங்க தலைவர் அவர்களிடம் வழங்கியதையும் மேற்கோள்காட்டி பாராட்டுகளை தெரிவித்துக்கொண்டார்கள்.

திரு. சீத்தாராமன் பிள்ளை அவர்கள் திருமதி. துர்க்கா பிரியா அவர்களின் புதல்வன் செல்வன். இரத்தினகுமார் அவரின் விளையாட்டு திறனை

பாராட்டும் வகையில் அவருக்கு ரூ. 100/ சிறப்பு பரிசு அளித்து வாழ்த்தினார்கள். கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார்க்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நமது சங்க துணைத்தலைவர் வீ. பாலாஜி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

கி. இராமநாதன், தலைவர்.

செல் : 9442820061

## பரசலூர் :

05–10–2025 அன்று சங்க கூட்டம் ஸ்ரீ சித்தி விநாயகர் தெரு, S.M. விஜய் – விஜயலெட்சுமி இல்லத்தில் V. விஜயலெட்சுமி இறைவணக்கம் பாட S.M. விஜய் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. கோவிந்தராஜன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

சென்ற மாத அறிக்கையை சிவ. சிவராமன் மாத நிதிய அறிக்கையை S.M. விஜய், மு.அ. நிதிய அறிக்கையை திரு. க. கோவிந்தராஜன் பிள்ளை வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற மாநில தேர்தல்,மாநிலபொதுக்குழுவில்சங்கபொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சங்க உறுப்பினர் திரு. T. ராமலிங்கம் பிள்ளை தந்தையார் திரு. R. தியாகராஜன் பிள்ளை (வயது 93) இயற்கை எய்தியதற்கு சங்க பொறுப்பாளர்கள் மணிக்கிராமத்தில் நடைபெற்ற இறுதி சடங்கில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்பு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசு சிவ. சிவராமனுக்கும், பெண்களுக்கான பரிசு கோ. பானுமதிக்கும் முறையே S.M. விஜய் – விஜயலெட்சுமி தம்பதியினர் வழங்கினார்கள். கூட்டம் நடத்திய இல்லத்தார் S.M. விஜய் – V. விஜயலெட்சுமி, M. விருத்தாம்பாள் அவர்களுக்கு முறையே க. வன்மீகலிங்கம், ஏ. ராஜேஸ்வரி சால்வை அணிவித்தனர்.

திரு. R. அமிர்தகணேசன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன், செயலர்.

Cell : 9894960438

## 80. இராதா நல்லூர் :

சங்க கூட்டம் 12–10–2025 அன்று சங்க செயலர் அ. இராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் கௌரவத்தலைவர் K. இராமசுப்ரமணியன் அவர்கள் முன்னிலை வகிக்க, தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க உறுப்பினரும் சீர்காழி மண்டல செயலருமான N. சிதம்பரநாதன் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (1) சங்க உறுப்பினர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்களும், அக்டோபர் மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. (2) நமது சங்க உறுப்பினர் N. சிதம்பரநாதன் அவர்கள் சீர்காழி மண்டல செயலராக 2025 – 2028 காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் தனது பணியினை சிறப்பாக செய்ய கேட்டுக்கொண்டு, பாராட்டி சங்க பொருளாளர் M. சீனிவாசன் அவர்களால் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது. N. சிதம்பரநாதன் அவர்கள் தன்னை சீர்காழி மண்டல செயலராக தேர்ந்தெடுக்க ஒத்துழைப்பு நல்கிய நமது சங்க கௌரவத் தலைவர், தலைவர், செயலர், பொருளாளர், இளைஞர் அணி மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நன்றியினை தெரிவித்தார்கள். (3) 2026–ம் ஆண்டிற்கான மாதாந்திர நாட்காட்டியினை அச்சிட்டு டிசம்பர் 2025–ல் உறுப்பினர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும்வழங்க செயலர் அவர்கள் முழு பொறுப்பேற்று செயல்பட கேட்டுக்கொள்ளப்பட்டது. (4) செயற்குழு உறுப்பினர் Et. S. சண்முகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

T. முத்துக்குமரசாமி,

தலைவர்.

9443645646

## பூம்புகார் - மேலையூர் :

சங்க கூட்டம் 7–10–2025 அன்று உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் முன்னாள் பொருளாளர் திரு. T. ஜெயபால் அவர்கள் தலைமை வகிக்க கூட்டம் இனிதே நடைபெற்றது.

டிசம்பர் மாத இறுதியில் நமது சங்க ஆண்டு விழா சம்மந்தமாக நடத்துவது பற்றி கருத்துக்கள் பரிமாறப்பட்டது.

நமது சங்க உறுப்பினர் திருமதி. உமாதேவி அகோரம் ஆசிரியை அவர்கள் "அறிவுசுடர் விருது" பெற்றமைக்கு சங்கம் சார்பாக வாழ்த்துகளும், பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டது.

நமது சங்க உறுப்பினர் R. இராமரத்தினம் பிள்ளை மற்றும் முரளிதரன் பிள்ளை இவர்களின் மறைவிற்கு சங்கம் சார்பாக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

உறுப்பினர் திரு. Er. S. அகோரம் அவர்களின் தேனீர் விருந்துக்கு பின் பொருளாளர் திரு. R. வெங்கடேசன் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- G. விஜயராகவன்,

செயலாளர்.

Cell : 9994635306

## நெடுங்காடு :

வரிச்சிக்குடி திரு. S. சிவசுப்ரமணியன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் சங்க கூட்டம் தலைவர், செயலாளர், பொருளாளர், மண்டல செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது. இறைவணக்கம் : செல்வி மு. அக்ஷயா பாடினார். மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தேர்தலில் புதிய பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்ட தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், அமைப்புச் செயலாளர், புதுச்சேரி மாநிலத் துணைத்தலைவர், புதுச்சேரி மண்டல செயலர் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

மாநில சங்க முன்னாள் பொறுப்பாளர்களுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

சங்க உறுப்பினர் விவரங்களை சேகரிக்கும் படிவம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அதை அடுத்த கூட்டத்தில் திரும்ப அளிக்க முடிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் புதிய உறுப்பினராக V. சீதளா தேவி, நிவேதா சரவணராஜ் அறிமுகமானார்கள்.

இந்த மாத பரிசு குலுக்கல். I. K. மோகன்தாஸ் – கீழகாசாக்குடி, II. S. வெங்கட்ரமணன் – வரிச்சிக்குடி, III. S. துர்கா – வரிச்சிக்குடி.

S. ரெங்கநாதன்,

செயலாளர்.

## திருவாரூர் :

சங்க கூட்டம் 21–09–2025 அன்று திருவாரூர் ராஜாங்க கட்டளை அரங்கத்தில் நடைபெற்றது. திரு. கண்ணபிரான் பிள்ளை அவர்கள் தலைமையிலும் திரு. கந்தசாமி பிள்ளை அவர்கள் தலைமையிலும் திரு. கந்தசாமி பிள்ளை அவர்கள் முன்னிலையிலும் நடந்தது. கடவுள் வணக்கமாக திருமுறை பாராயணம் அனைவராலும் சேர்ந்து பாடப்பெற்றது. பின்னர் தலைவர் உரையில் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று, புதியதாக சங்கத்தில் இணைந்து கொண்ட திருத்துறைபூண்டி திரு. சங்கர் கணேஷ், திருமருகல் போலகம் இளங்கோ பிள்ளை குமாரன் திரு. தமிழரசன், கங்கவடங்க நல்லூர் திரு. விஜயன் தம்பதியரை அறிமுகப்படுத்தி வாழ்த்தினார்கள். மற்றும் வரும் 28–9–25 அன்று நடக்க இருக்கும் மாநில சங்க பொதுக்குழு மற்றும் தேர்தலில் திருவாரூர் சங்கம் சார்பில் திரு. கண்ணபிரான் பிள்ளை, திரு. சோமசுந்தரம் பிள்ளை, திரு. பொன்னுசாமி பிள்ளை கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டிக்கொண்டார்கள். பின்னர் சிறப்புரையாக திருமருகல் பாலசுப்ரமணிய பிள்ளை சங்க இணை செயலாளர் வாழ்க்கை நடைமுறைகள், சங்க பணிகள் பற்றி பேசினார்கள். அடுத்ததாக செயலாளர் சோமசுந்தரம் பிள்ளை ஆன்மீக உரையாக இயற்பகை நாயனார் பற்றி சிறப்பாக பேசினார்கள். கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கம் சார்பில் தேநீர், சிற்றுண்டி வழங்கப்பட்டது. திரு. பொன்னுசாமி பிள்ளை நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்கள்.

– அ. சோமசுந்தரம்,

செயலாளர்.

## கும்பகோணம் :

சமூக நல சங்க தீபாவளி நிகழ்வாக ஒவ்வொரு ஆண்டும் அன்னை அரவிந்தர் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு உடை போர்வை உணவு உறுப்பினர்களின் பங்களிப்பில் வழங்குவது போல இன்று 17–10–2025 வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் முதியோர்களுக்கு சங்க உறுப்பினர்கள் உடை, போர்வை, உணவு வழங்கி மகிழ்ந்தனர். 17–10–2025 வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு மேல் கும்பகோணம் பாலக்கரை கவி பாரதி நகர் துணைத்தலைவர் எம். பாலகுரு அவர்கள் தலைமையிலும் துணைத்தலைவர் ஜி. ராஜாராமன் அவர்கள் முன்னிலையிலும் மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

20–8–2025 அன்று உயர்திரு. டி.எம். வைத்தியநாதன் அவர்கள் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக கொடுத்த கடிதம் 17–10–2025 நடைபெற்ற கூட்டத்தில் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சங்கம் துவக்கியது முதல்

17 ஆண்டுகாலம் செயலாளராகவும் பின்னர் தலைவராகவும் இருந்து ஆற்றிய பணிகளுக்கு பாராட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது.

பொறுப்புத் தலைவராக ஏ.எஸ். பழனி அவர்களும் பொருளாளராக ஜி. ராஜாராமன் அவர்களும் ஏக மனதாக உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் வருகிற பொதுக்குழுவில் அங்கீகாரம் பெற கேட்டுக்கொள்ளப்பட்டது.

கௌரவத் தலைவராக ஆர். கல்யாண சுந்தரம் அவர்களுடன் வி.ரகுநாதன் அவர்களையும் கூட்டத்தில் ஏக மனதாக தேர்வு செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் துணைச் செயலாளராக ஆர். மகேந்திரன் மற்றும் எம். நடராஜன் இருவரும் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தீபாவளி நிகழ்வு வரவு செலவு பொருளாளர் ஏ.எஸ். பழனி அவர்களால் படிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2026 ஜனவரி மாதத்தில் பொங்கல் விழா நடத்த ஏதுவாக அடுத்த மாத கூட்டத்தில் விழாக்குழு அமைப்பது சம்பந்தமாக முடிவெடுக்கவும், மங்கல சந்திப்பு 2026 ஏப்ரல் மாதம் முதல் வாரம் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. பதிவுகள் ஜனவரி 2026, 15 தேதிக்கு மேல் துவங்குவது என முடிவு செய்யப்பட்டது.

நமது கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நலச் சங்கம் துவங்குவதற்கு அடிகோலிய சங்க துணைத்தலைவர் என். சுப்புராயன் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு அவர் செய்த பணிகளை நினைவு கூர்ந்தும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- S. விஜயகுமார் பிள்ளை B.Com,
செயலாளர்.

## மதுரை :

சங்க செயற்குழு கூட்டம் 12–10–2025 அன்று தருமைபுர ஆதீன மண்டபத்தில் தலைவர் முனைவர் K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். மாநில துணைத்தலைவர் S. உமையொருபாகம் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அண்மையில் தேர்ந்து எடுக்கப்பட்ட மாநில தலைவர் மற்றும் இதர உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

மேலும் 2025 ஆண்டுக்கான ஆண்டு விழா 25–12–2025 அன்று கொண்டாட தீர்மானிக்கப்பட்டது.

கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டு தலைவர், செயலாளர் கையொப்பம் இட்டு பரிந்துரை செய்யப்பட்டது. மதுரை மண்டல தலைவர் திரு. உமையொருபாகம் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மகளிர் அணி செயற்குழு உறுப்பினர் திருமதி. உமா மகேஸ்வரி பங்கேற்று சிறப்பித்தார். திரு. சொக்கலிங்கம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- B. ரவிச்சந்திரன், செயலாளர்.

## திருநெல்வேலி :

சங்கத்தின் முதல் செயற்குழு கூட்டம் 05–10–2025 அன்று காலை திருநெல்வேலி டவுன் நம்பர் 42 வேணுவன் குமாரர் கோவில் தெரு, நமது சங்க கட்டிடத்தில் உயர் கார்குல கர்ணன் திரு. வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் வைத்து சி. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயற்குழுக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் செயலாளர் C. ராமசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்றார். திரு. முருக இளங்கோ அவர்கள் இறைவணக்கத்துடன் செயற்குழு தொடங்கியது. முதற்கட்டமாக நமது சங்கத்தின் முன்னாள் கவுரவ ஆலோசகர் சங்கரன் கோவில் திரு. எஸ். சக்திவேல் பிள்ளை அவர்கள் நமது சங்கத்திற்கு கல்வி வைப்பு நிதியாக ரூபாய் ஒரு லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். அவர்களது நினைவாக திரு. எஸ். சக்திவேல் பிள்ளை எஸ். பவானி அவர்களது திருஉருவப்படம் திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை நிமித்தமாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நமது சங்கத்தின் கௌரவத் தலைவர் மனிதநேயம் T.N. முத்துகுமார சுவாமி அவர்கள் ஆலோசனைபடி சங்கத்தின் தலைவர் செயலாளர், பொருளாளர் முன்னிலையில் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் பங்களிப்புடன் மகளிர் அணி சார்பில் ஆயுதபூஜை முன்னிட்டு திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது. விளக்கு பூஜை சிறப்புடன் நடைபெற உதவி செய்த உபயதாரர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

- C. ராமசுப்பிரமணியன், செயலாளர்.

## கோவை :

சங்க கூட்டம் 12–ந் தேதி அன்று அவிநாசியில் டாக்டர் திரு. R. ஜெயபால் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. ஆகஸ்டு 31 அன்று நடைபெற்ற

கோவை சங்க ஆண்டு விழாவிற்கு பெருமளவில் பொருளுதவி செய்த நற்றுணையாளர்கள் டாக்டர் திரு. K. பழனிவேலாயுதம், திரு. B. அனந்தபத்மநாபன் ஆகியோர் இருப்பிடங்களுக்கு சென்று சங்க நிர்வாகிகளால் நன்றி தெரிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அவிநாசி டாக்டர் திரு. R. ஜெயபால் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக அங்கு சென்றோம். டாக்டர் திரு. R. ஜெயபால் மற்றும் டாக்டர் திருமதி. மணிமேகலை ஜெயபால் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இம்மாத கூட்டம் அன்றே அங்கு நடத்தப்பட்டது. அடுத்து திருப்பூர் திரு. M. சண்முகசுந்தரம் அவர்கள் இல்லத்திற்குச் செல்லவும் திட்டமிடப்பட்டுள்ளது. டாக்டர் திரு. R. ஜெயபால் அவர்கள் அருள்மிகு கருணாம்பிகை உடனாய அவிநாசிலிங்கேஷ்வரர் திருக்கோவில் மற்றும் அருகிலுள்ள அருள்மிகு கலிவரதராஜபெருமாள் திருக்கோவில் அழைத்துச் சென்று சிறப்பாக தரிசனம் செய்ய உதவினார்கள்.

கோவில் அருகிலேயே வசிக்கும் சங்க உறுப்பினர் திரு. A.S. தங்கவேல் அவர்கள் இல்லம் சென்று மகிழ்ந்தோம். அடுத்து டாக்டர் தம்பதியினர் உபசரிக்க சங்க மாதாந்திர கூட்டம் அவர்கள் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு புதிய நிர்வாகிகளுக்கு பாராட்டும் அவர்கள் செயல்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு தருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. டாக்டர் R. ஜெயபால் தம்பதியினர் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நினைவு பரிசு தந்து மகிழ்வித்தார்கள். சிறப்பான மதிய உணவிற்கும் ஏற்பாடு செய்து வழங்கினார்கள். அக்டோபர் மாத சங்க கூட்டம் இறையருள் தந்த ஆனந்தத்தால் ஒரு மினி ஆன்மீக சுற்றுலாவாகவும் அமைந்தது.

- S. வள்ளிநாயகம்,
செயலாளர்

---

## வருந்துகிறோம்

சீர்காழி தாலுகா ஆயங்குடிப்பள்ளம் திரு. மோகன் அவர்களின் தந்தை திரு. ஜெகதீசன் பிள்ளை அவர்கள் 12–10–25 அன்று இயற்கை எய்தினார் என்பதையும், சீர்காழி T.P.S. நகர் நாகராஜன் மாமனார் திரு. சண்முகம் பிள்ளை அவர்கள் 23–09–25 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

## "கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரம்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 300 |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகள் மட்டும்) | 2000 |
| மணமகள், மணமகன் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கருப்பு வெள்ளை ¼ பக்கம் | 750 |
| கருப்பு வெள்ளை ½ பக்கம் | 1500 |
| கருப்பு வெள்ளை முழு பக்கம் | 3000 |
| கலர் ¼ பக்கம் | 2000 |
| கலர் ½ பக்கம் | 4000 |
| கலர் முழு பக்கம் | 7000 |
| முன் அட்டை உட்புறம் | 8000 |
| பின் அட்டை உட்புறம் | 8000 |
| பின் அட்டை வெளிப்புறம் | 10000 |

## குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்,

சென்னை – 44

## 18–வது மங்கல சந்திப்பு

**நடைபெறும் நாள் 28.12.2025**

கார்குல சொந்தங்களுக்கு !

வணக்கம்.

சென்னையில் நமது சங்கம் நடத்தும் மாபெரும் 18–வது மங்கல சந்திப்பிற்கு உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

தேதி: **28.12.2025 (ஞாயிற்றுக்கிழமை)** நேரம்: **காலை 9.00 – 1.00 மணி**

இடம்: **ஸ்ரீ ராம் கணேஷ் மஹால்,**

இராஜேந்திர பிரசாத் ரோடு, குரோம்பேட்டை, சென்னை – 44.

**பதிவு செய்யும் வழிமுறைகள்**

* **9488818162** என்ற WhatsApp எண்ணில் வணக்கம் என்று அனுப்பவும்.
* தாங்கள் பதிவிடும் விவரம் அப்படியே கையேட்டில் இடம் பெறும் என்பதை கருத்தில் கொள்ளவும்.

### குறிப்பு

* தமிழ் வழி பதிவுகள் மட்டுமே ஏற்கப்படும்.
* நீங்கள் செய்த பதிவை எங்கள் WhatsApp செயலி உங்களுக்கு அனுப்பும். மற்றும் 18.12.2025–க்கு பின் ஒரு Proof உங்களுக்கு அனுப்பப்படும்.
* மறுமணம் பதிவு செய்வோர் பெயருக்கு பக்கத்திலேயே (மறுமணம்) என தெரிவிக்கவும்.
* நேரில் பங்குபெறும் பெற்றோர் தங்கள் வரனை பற்றியும், எப்படிப்பட்ட வரனை எதிர்பார்க்கிறார்கள் எனவும் அறிமுகம் செய்துகொள்ளலாம்.

**பதிவு செய்ய கடைசி தேதி: 18-12-2025**

பதிவு கட்டணம் ரூ. **700** மட்டும். **9488818162** என்ற எண்ணிற்கு **(Karkathar Welfare Trust) Gpay** செய்யவும்.

**மங்கல சந்திப்பு பணிக்குழு**

| | |
|---|---|
| தலைவர் | திரு. **S. மனோகர்** – 9444913626 |
| செயலாளர் | திரு. **B. தியாகராஜன்** – 9944463333 |
| பொருளாளர் | திரு. **J. தீபன்** – 9659632577 |
| அமைப்பாளர் | திரு. **R. ஜவகர்** – 9442936710 |

**UPI ID: 9488818162@cnrb**

## சிதம்பரம் பகுதி கார்காத்தார் சங்கங்களின்

# 21-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர்! வணக்கம்.

நமது சங்கங்களின் சார்பாக **21**-வது மங்கல சந்திப்பு வருகின்ற **04.01.2026 ஞாயிற்றுக்கிழமை** காலை மணி **9.00 - 1.00** மணி வரை சிதம்பரம், கனகசபை நகர், காசி மடம் தெருவில் அமைந்துள்ள **ஸ்ரீ சிவகாமி அம்மை கலையரங்கத்தில்** நடைபெற உள்ளது. மணமகன், மணமகள் பதிவுகளை தாங்களே தங்களுடைய கைபேசி மூலம் கீழ்கண்ட முறையில் பிழையில்லாமல் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

## பதிவு செய்யும் வழிமுறைகள்

- **75985 22750 WhatsApp** நம்பருக்கு வணக்கம் என்ற குறுஞ்செய்தி அனுப்பி லிங்கை பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.
- **https://forms.gle/ynES7ZVnLeM7gJ1UA** என்ற லிங்கில் சென்று பதிவு செய்து கொள்ளலாம்.
- இந்த **QR Code**-ஐ ஸ்கேன் செய்து லிங்கைப் பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.
- பதிவு ஒன்றுக்கு ரூபாய் **600/-**ஐ **G. Sivaraman G-Pay No : 75985 22750**-ல் செலுத்தவும்.
- பதிவுக்கான கடைசி தேதி - **25.12.2025**

- ❖ **ஆன்லைன் (Online) முறையில் மட்டுமே பதிவுகள் செய்ய இயலும்.**
- ❖ **நேரிலோ மற்றும் தபால் மூலமாகவோ பதிவுகள் செய்ய இயலாது.**
- ❖ **தாங்கள் பதிவு செய்யும் விபரங்கள் நேரடியாக பிரிண்டிங் செல்வதால் தாங்கள் மிக கவனமுடன், சரியாக பிழையில்லாமல் பதிவு செய்யவும்.**

இந்த முறையில் பதிவு செய்து முடித்தவுடன் தாங்கள் குறிப்பிடும் **Email** முகவரிக்கு பதிவு செய்த விபரங்கள் **(Acknowledgement)** உடனே வந்து சேரும். தங்களுக்கான பதிவு எண் கைபேசி மூலம் தெரிவிக்கப்படும்.

தனிப்பிரதி வேண்டுவோர் மட்டும் கீழ்கண்ட முகவரியில் பதிவு செய்து கொள்ளவும். தபாலில் பெறுவதற்கு ஏற்படும் கால தாமதங்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்பு முகவரி :
**G. சிவராமன் பிள்ளை**
**49, லால்கான் தெரு, சிதம்பரம்.**
**Cell: 97870 68062**

இப்படிக்கு,
**மங்கல சந்திப்பு பணிக்குழு,**
**சிதம்பரம் பகுதி.**

## மாதிரி விண்ணப்பம்

(கீழ்கண்ட தகவல்கள் மட்டும் (Online) பதிவு செய்ய போதுமானது)

| | |
|---|---|
| Email | |
| மணமகள் / மணமகன் பெயர் | |
| பாலினம் (ஆண் / பெண்) | |
| பிறந்த தேதி | |
| உயரம் (சென்டி மீட்டர்) | |
| நட்சத்திரம் | |
| கோத்திரம் | |
| நிறம் | |
| கல்வி தகுதி | |
| பணி விபரம் | |
| ஊதியம் | |
| தந்தை பெயர் | |
| பூர்வீகம் | |
| பணி விபரம் | |
| தாயார் பெயர் | |
| பூர்வீகம் | |
| பணி விபரம் | |
| உடன் பிறந்தோர் (ஆண்/பெண்) | |
| விருப்பம் & இதர தகவல்கள் | |
| தபால் முகவரி & பின்கோடு | |
| தொடர்பு எண் – I | |
| தொடர்பு எண் – II (WhatsApp) | |
| புத்தகத்தை தபாலில் பெற விருப்பமா? ஆம்/ இல்லை | |
| G-Pay - Name & Transaction No. & Date | |

## தடை அதை உடை....
## முடிவெடு முன்னேறு

Dr. D. Kalyanakumar, Trichy-18.

வாழ்க்கையில் தடைகள் இல்லாதவர் யாருமில்லை தடைகளை எதிர்கொள்வது. அவற்றை உடைத்து முன்னேறுவது தான் வாழ்க்கையின் ஒரு பகுதி தடைகளை கண்டு துவண்டுவிடாமல், துணிவுடன் அவற்றை தகர்த்தெறிந்து முன்னேறினால் வாழ்வில் வெற்றி நிச்சயம். தடைகள் இல்லாத உலகம் இல்லை. வாழ்க்கை ஒரு தொடர்ச்சியான பயணம் இந்த பயணத்தில், பல தடைகள், சவால்கள், சிக்கல்கள் எழலாம். இவை தடைகளாக மட்டுமல்ல, ஒரு படிநிலையாகவும், புதிய அனுபவமாகவும் அமைகின்றன. இந்த தடைகளை எதிர்கொண்டு, அவற்றை வென்று, முன்னேறுவதே ஒரு மனிதனின் திறமை.

சோம்பலை விடுத்து அறியாமையை போக்கி தடைகளை எதிர்த்து முன்னேற்ற பாதையில் செல்ல செல்ல நம்மால் சரித்திரம் படைக்க முடியும். அப்படி மோதி போராடி வரும் தோல்வியைக் கண்டு துவளாமல் முன்னேறி சரித்திரம் படைப்பதற்கு வயது ஒரு தடையே அல்ல. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள். வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்ற குறிக்கோள் மட்டும் இருந்து விட்டால் நாம் செல்லும் பாதையில் எவ்வளவு தடைகள் வந்தாலும் முறியடித்து முன்னேறிவிடலாம்.

வாழ்க்கையில் ஏற்படும் தடைகளை எதிர்கொள்ள எந்த சூழ்நிலையிலும் நேர்மறையாக சிந்திப்பது மிகவும் முக்கியம் நேர்மறையான எண்ணங்கள் நம்மை நம்பிக்கையுடன் இருக்க வைத்து தடைகளை எதிர்கொள்ளும் தைரியத்தைத் தரும். தன்னம்பிக்கை என்பது எந்த ஒரு வெற்றிக்கும் அடிப்படையான ஒன்று. தன்னம்பிக்கை இருந்தால் நாம் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கலாம்; தவறுகளில்இருந்துபாடம்கற்றுக்கொள்ள வேண்டும்.

உயர்வின் உச்சியிலே ஒளிவீசிக் கொண்டிருக்கும் உயர்ந்த மனிதர்களின் உயரத்தை மட்டுமே நம்மில் பலர் எண்ணி வியக்கின்றோம். ஆனால் அந்த நிலைக்கு உயர அவர்கள் பட்ட துன்பங்களையும் எடுத்த தொடர் முயற்சிகளையும் எண்ணிப் பார்ப்பது இல்லை. எத்தனையோ கல்லடி சொல்லடி ஏச்சுக்கள். ஏளனம் போன்ற எதிர்ப்புகளை பொறுமையோடும் நம்பிக்கையோடும், உறுதியோடும் சமாளித்ததால் தான் இன்று பலர் வரலாற்றில் இடம் பெற்று இருக்கிறார்கள். சுடச்சுடத் தான் தங்கம் ஒளிரும். பட்டை தீட்டத் தீட்டத்தான் வைரம் ஒளி வீசும். அதுபோல நம்மை வருத்தும் துயரம் எல்லாம் நம்மை பக்குவப்படுத்தி சிறந்த மனிதனாக உருவாக்குகின்றது.

இன்றைய வாழ்க்கை போட்டியும், பொறாமையும் நிறைந்ததாக இருக்கிறது. எல்லோரும் ஓடிக்கொண்டே இருக்கும் உலகம் இது. இங்கே நாம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அப்படி ஒதுங்கி நின்றால் பின்னால் வருகிற கூட்டம் நம்மை மிதித்து கீழே தள்ளி விட்டு ஏறிச்சென்று கொண்டே இருக்கும். அதன் மூலம் நாம் வாழ்ந்ததற்கான அடையாளமே இல்லாமல் போய்விடும். நாம் நமக்கான அடையாளத்தை வெற்றி மூலம்தான் நிலைநாட்ட வேண்டும்.

தடைகளை எதிர்த்து நிற்க இமயமலையும் வழி கொடுக்கும். உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மை சிறைபிடிக்கும் என்பார்கள். நாம் பெறும் வெற்றி என்பது உலகமே நமக்கு ஆதரவாக இருக்கும் போது சுலபமாக பெறுவது அல்ல, அனைத்துமே நமக்கு எதிராக செயல்படும்பொழுது தனித்து நின்று போராடி தடைகளை உடைத்தெறிந்து வெற்றி பெறுவதுதான்.

ALWAYS REMEMBER THIS !

* Grapes must be crushed to make Wine
* Diamonds form under pressure
* Olives are pressed to release oil
* Seeds grow in darkness

Whenever you feel crushed, under pressure (or) in darkness, it means that you're in a powerful place of transformation.

---

## தகவல் துளிகள்

1. உலகின் முதல் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டரின் பெயர் என்ன ? எனியாக்
2. உலகின் மிக பழமையான மியூசியம் எது ? ஆஸ்மோலியன்
3. கோள்களின் இயக்கத்தை கண்டு பிடித்தவர் ? கெப்ளர்
4. கணிப்பொறி மொழியை கண்டு பிடித்தவர் ? கிரேஸ் கோப்பர்
5. உலகின் மிகப்பெரிய நூலகம் ? அமெரிக்க காங்கிரல் நூலகம்
6. உலகில் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன ? 12,500
7. புயல் எச்சரிக்கை கொடுக்க துவங்கிய ஆண்டு ? 1886
8. கடல்களின் எஜமானி என்று அழைக்கப்படும் நாடு எது ? இங்கிலாந்து

## முதுமை என்னும் பூங்காற்று...!

இளமை, முதுமை இரண்டுக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. இரண்டுமே மூன்று எழுத்துக்கள். ஆனால் அந்த பருவங்களில் ஏற்படும் மாற்றங்களும், விளைவுகளும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம். ஒரு குழந்தை பிறக்கும் போது எல்லோருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அக்குழந்தை ஒரு புதிய வரவு. நம்பிக்கையின் எதிர்காலம். வாழ்க்கையின் அடையாளம். அக்குழந்தையின் உயர் கல்வி, உத்தியோகம் நல்வாழ்க்கை என எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் பெற்றோர் வளர்க்கின்றனர். ஆனால் முதுமைப் பருவமோ எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தை அடைந்த நிலை.

முதுமை என்பது உடலின் வளர்ச்சி மட்டுமல்ல. அறிவின் வளர்ச்சி, அனுபவத்தின் வளர்ச்சி மற்றும் பொறுப்புணர்வு அடங்கியதே முதுமைப் பருவம். வயதான பெற்றோர்கள் தன் குடும்பம், குழந்தைகள் என குடும்பத்துக்காக உழைத்து, பிள்ளைகள் தன் காலில் நிற்கும் அளவில் ஒரு வழியை காட்டிவிட்டு இளைப்பாறும் இனிய காலம்தான் முதுமைப் பருவம். முதுமை காலத்தில் உடலில் தெம்பும், மனதில் உறுதியும் இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு முதியவர்கள் சில பழக்கங்களை கடைபிடிக்க வேண்டும். ஏழு மணி நேரம் உறக்கம் அவசியம். காலை உணவு தவிர்க்க கூடாது. தினமும் காலையில் பதினைந்து நிமிடம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடல் எடை கூடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

தம் மக்களின் சிறு கைகளால் கிடைக்கப் பெற்ற உணவு, பெற்றவர்களுக்கு அமிழ்தினும் இனிமையானதாக இருக்கும், என்ற திருவள்ளுவரின் கூற்றுபடி பிள்ளைகள் தம் பெற்றோரின் பசியாற்றி பேணி காப்பது தங்களின் தலையாய கடமை என்ற புரிதல் வேண்டும். வயதான பெற்றோர்களுக்கு தாம் பெற்ற பிள்ளைகளை விட தங்களின் பேரப்பிள்ளைகளிடத்தில்தான் அன்பும், பாசமும் அதிகமாக இருக்கும். குழந்தைகளோடு குழந்தையாக தாங்களும் மாறி பேரப்பிள்ளைகளோடு விளையாடுவதும், கதை சொல்வதும், சோறு ஊட்டுவதும் அவர்களுக்கு பெரிய மகிழ்ச்சியைத் தரும். வயதானவர்களின் தேவை அறிந்து விருப்பம் புரிந்து செயல்படுவது பிள்ளைகளின் கடமையாகும்.

வயதான பெரியவர்களும் தங்களின் பிள்ளைகளுக்கு தங்களால் தொந்தரவு இல்லாத வகையில் தங்களின் தேவையை தாங்களே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் இருக்கவேண்டும். படுக்கையில் இருந்து எழுந்து உடனே நிற்கவோ நடக்கவோ கூடாது. முதலில் எழுந்து உட்கார்ந்து, பிறகு மெதுவாக எழுந்து நிற்க வேண்டும். அதன் பின்னரே நடக்க வேண்டும். பிள்ளைகளும் தங்களின் பெற்றோர்களை அன்புடனும் பாசத்தோடும் நன்றியோடு கவனிக்கும்பட்சத்தில் உங்கள் பிள்ளைகள் உங்களை கவனித்துக்கொண்டு இருப்பார்கள். அக்குழந்தைகள் உங்களை (தம் பெற்றோரை) எப்படியெல்லாம் கவனிக்க வேண்டும், பராமரிக்க வேண்டும் என்பதை உணர்ந்து உங்களை பாதுகாப்போடு நன்முறையில் கவனிப்பார்கள்.

முதுமொழிகள் சில அறிவோம்!

பருத்தோலை குருத்தோலை ஆகாது. ஆனால் குருத்தோலை பருத்தோலை ஆகும். மூத்தோர் சொல்படி நடப்போரால் மூவுலகையும் வெல்ல முடியும்!

வேர் இன்றி மரம் வளராது, முதியோர் இன்றி சந்ததி வளராது!

நடந்தால் நாடு உறவாடும், படுத்தால் பாயும் பகையாகும்!

இளமை அழகின் சிரிப்பு, முதுமை அடக்கத்தின் பூரிப்பு!

பட்டறிவு பெட்டகம் முதுமை!

ஆற்று நீர் இளமை என்றால், அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தும் அணை முதுமை!

இளமைக்கு பின்னரே முதுமை. உழைப்புக்கு பின்னரே ஓய்வு! குடும்பத்தில் முதியவர்களின் எதிர்பார்ப்பு அன்பு, பாசம், அரவணைப்பாக பேசுவது மட்டுமே! இளமைக் காலம் வசந்தகாலமாக இருக்கவும், பூங்காற்றாக வீசவும், சின்ன உடற்பயிற்சி, அளவான, சத்தான உணவு, மனதில் உறுதி, ஆன்மிக ஈடுபாடு, தியானம், இது எல்லாவற்றிற்கும் மேலாக உங்களின் தேவைக்கான பணம், இது அனைத்தும் கிடைக்கும் வகையில் வாழ்நாள் அமைந்தால் முதுமைக் காலம் ‘வசந்தகாலமாக’ அமையும்.

குடும்பத்தில் பெரியவர்கள் ஆலமரம் போன்றவர்கள். அம்மர நிழலில் பிள்ளைகள் விழுதுகளாய் நிற்கும் போது முதியவர்கள் மனதில் மகிழ்ச்சி என்ற தென்றல் காற்று வீசும்!

நன்றி!

இரா. திலகம், வையூர்.

**அயோத்யா, காசி, கயா, அலகாபாத் (பிரயாகை), யாத்திரை ரூ. 9999/-**
நாள் : **19.02.2026 முதல் 27.02.2026 முடிய 9 நாட்கள்** (A/c BUS)

**சித்ரகூடம், நைமிசாரண்யம், அயோத்யா, அலகாபாத் (பிரயாகை), காசி, கயா யாத்திரை**
நாள் : **16.5.2026 முதல் முடிய 12 நாட்கள் - ரூ.13,500/-** (A/c BUS)

**மலைநாட்டு 13 திவ்ய வைணவத் தலங்கள் குருவாயூர் & கேரள சபரிமலை யாத்திரை- ரூ.6660/-**
நாள் : **12.02.2026 முதல் 16.02.2026 முடிய 5 நாட்கள்** (A/c BUS)

**பஞ்சதுவாரகா & மூன்று ஜோதிர்லிங்க, கடல் பாவ் நகர் யாத்திரை**
நாள் : **21.3.2026 முதல் 03.4.2026 முடிய 14 நாட்கள் - ரூ.14,500/-**

**பூரி, கல்கத்தா, கொனார்க், புவனேஸ்வர், விஜயவாடா, மங்களகிரி, பானக நரசிம்மர் யாத்திரை**
நாள் : **05.04.2026 முதல் 7 நாட்கள் - ரூ.8,199/-**

**நேபாள் நாட்டு, பசுபதிநாத் & முக்திநாத் யாத்திரை**
நாள் : **4.3.2026 முதல் 15 நாட்கள் - ரூ.36900/-**

**பண்டரிபுரம், 5 ஜோதிர்லிங்கம், 8 விநாயகர், சீரடி, மும்பை யாத்திரை**
**நாள் : 27.04.2026 முதல் 12 நாட்கள் ரூ.14,400/-**

**கர்நாடக மாநில யாத்திரை - ரூ.9000/-** (நுழைவுக் கட்டணம் உட்பட)
**நாள் : 03.02.2026 முதல் 09.02.2026 வரை (A/C பஸ்)**

**ஆந்திர மாநில, அகோபிலம், மகாநந்தி, ஸ்ரீசைலம், மந்த்ராலயம் யாத்திரை**
**நாள் : 16.4.2026 முதல் 20.4.2026 வரை - ரூ.5,400/-** A/C **பஸ்**

தொடர்புக்கு : **ஆர்.எஸ்.நாதன்**, 14/36, புதுத்தெரு, சிதம்பரம். **Cell : 94436 79282**

# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி N. விஜயதுர்கா |
| படிப்பு | B.Tech., ECE., |
| வேலை | IT Sector, Chennai, Rs. 18 Lakhs / PA |
| பிறந்த தேதி | 24.09.2000 |
| உயரம் | 158 cm |
| நட்சத்திரம் | ஆயில்யம் 3ஆம் பாதம் |
| கோத்திரம் | பொன்னமுட |
| பூர்வீகம் | ஸ்ரீமுஷ்ணம் |
| தகப்பனார் | B. நாராயணசாமி, Retired form L&T |
| தாயார் | N. ரேவதி இல்லத்தரசி (சூரியனார்கோவில்) |
| முகவரி | சப்தரிஷி தெரு, ஸ்ரீமுஷ்ணம்,<br>ஸ்ரீமுஷ்ணம் வட்டம்,<br>கடலூர் மாவட்டம் - 608 703.<br>Cell : 98251 64037, 94931 70407<br>E-mail : bnswamylnt@gmail.com |
| விருப்பம் | நன்கு படித்து வேலையில் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வி B.G. பவித்ரா |
| படிப்பு | CA (Chartered Accountant) |
| வேலை | Financial Accounting Associate Wells Fargo, Chennai<br>Rs. 14,20,000/PA |
| பிறந்த தேதி | 20.03.2000 |
| உயரம் | 173 cm |
| நட்சத்திரம் | உத்திரம் |
| கோத்திரம் | சாத்துகுட |
| பூர்வீகம் | ஜெயங்கொண்டம் |
| தகப்பனார் | K. பாலசுப்ரமணியன் |
| தாயார் | B. கீதா (அம்பாள்புரம்) |
| முகவரி | 11B4, தெற்கு வெள்ளாழத் தெரு,<br>ஜெயங்கொண்டம்<br>Cell : 75026 06144 (Whatsapp), 99769 15262 |
| விருப்பம் | சமபடிப்பு / சென்னை or ஹைதராபாத்தில் பணிபுரியும் வரன். |



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி M. சிவரஞ்ஜனி** |
| படிப்பு | B.E. (CS) |
| வேலை | TCS - System Eng., Chennai,<br>Rs. 7.6 Lakhs / PA |
| பிறந்த தேதி | 16.01.2002 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் 3-ம் பாதம் |
| கோத்திரம் | கூடலுட |
| பூர்வீகம் | கீழ்அதங்குடி, காட்டுமன்னார்கோவில் |
| தகப்பனார் | **L. மணிவண்ணன்** |
| தாயார் | **M. இராஜேஸ்வரி,** மாதானம் - சீர்காழி |
| முகவரி | 6B, ஜானகிராமன் தெரு, R.K. நகர்,<br>ஆலப்பாக்கம், புதுபெருங்களத்தூர்,<br>சீனுவாச நகர் அஞ்சல், சென்னை - 600 063.<br>Cell : 94446 09393, 86809 39377 |
| விருப்பம் | சமபடிப்பு, IT நிறுவன பணி |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி சீ. சிவநந்தினி** |
| படிப்பு | B.E. (EEE) |
| வேலை | Software Engineer,<br>Capegemini, Chennai<br>Rs. 14 Lakhs/PA |
| பிறந்த தேதி | 25.11.1998 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | திருவோணம் |
| கோத்திரம் | காருட |
| பூர்வீகம் | பூர்த்தங்குடி, சிதம்பரம் |
| தகப்பனார் | **கி. சீனுவாசன்** (லேட்) |
| தாயார் | **சீ. கீதா** (Home Maker) |
| முகவரி | 13, தேரடிப் பிள்ளையார் கோவில் தெரு,<br>சிதம்பரம் - 608 001.<br>Cell : 83004 61541 97910 69494 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் N. சாய்கிருஷ்ணா |
| படிப்பு | B.Tech., |
| வேலை | IT Sector, Bangalore, Rs. 40 Lakhs / PA |
| பிறந்த தேதி | 11.10.1997 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | பொன்னமுட |
| பூர்வீகம் | ஸ்ரீமுஷ்ணம் |
| தகப்பனார் | B. நாராயணசாமி, Retired form L&T |
| தாயார் | N. ரேவதி இல்லத்தரசி (சூரியனார்கோவில்) |
| முகவரி | சப்தரிஷி தெரு, ஸ்ரீமுஷ்ணம்,<br>ஸ்ரீமுஷ்ணம் வட்டம்,<br>கடலூர் மாவட்டம் - 608 703.<br>Cell : 98251 64037, 94931 70407<br>E-mail : bnswamylnt@gmail.com |
| விருப்பம் | நன்கு படித்து வேலையில் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் T.E.SAVEETHKUMAR |
| படிப்பு | B.Tech. (BIO-INFO) |
| வேலை | Software Developer<br>Zoho Corporation Chennai |
| பிறந்த தேதி | 1-2-1998 |
| நட்சத்திரம் | Uthrattathi |
| கோத்திரம் | Vela |
| பூர்வீகம் | Thalainayaru (Mayiladuthurai) |
| தகப்பனார் | S. Elangovan (Builder) |
| தாயார் | E. Selvi, Home Maker (Tiruppangur) |
| முகவரி | 12/85, EB Colony,<br>Krishnamoorthy Nagar,<br>Tirchy - 21.<br>Cell : 82489 08145, 63791 28889 |



# அண்ணா நகர் கார்காத்த வேளாளர் சங்கம் - 18ஆம் ஆண்டு நிறைவு விழா


















# அண்ணா நகர் கார்காத்த வேளாளர் சங்கம் - 18ஆம் ஆண்டு நிறைவு விழா

















# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. RAVEEN KUMAR** |
| படிப்பு | M. Tech., VLSI., |
| வேலை | Senior Lead Engineer<br>Qualcomm, Bangalore<br>Rs. 45 lakhs per Annum |
| பிறந்த தேதி | 21.11.1993 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | Sathayam |
| கோத்திரம் | Kanagarayar |
| பூர்வீகம் | Madurai |
| தகப்பனார் | **A. Sankar**<br>Retd Director of School Education |
| தாயார் | **P. Vasanthi**<br>Retd Head Mistress Govt HSS School |
| முகவரி | Plot No. 28 & 29, VGN Highness,<br>Srinivasapuram, Iyyappanthangal, Chennai-600056.<br>Cell : 7845914635/ 9488094635 |
| விருப்பம் | Employed or Employable Good looking girl belongs to respectable family |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. கௌசிக்** |
| படிப்பு | B.Tech., M.B.A., |
| வேலை | Sr. Project Engineer, Qatar<br>Rs. 2 Lakhs / Month |
| பிறந்த தேதி | 21.05.1995 |
| உயரம் | 180 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | மழுவராயநல்லூர் - சிதம்பரம் |
| தகப்பனார் | **V. சங்கர்,** தலைமை மருந்தாளுநர் (ஓய்வு) |
| தாயார் | **S. வித்யா** (பாலாகுடி) இல்லத்தரசி |
| முகவரி | 53, தேவதாஸ் நகர்,<br>விபீஷ்ணபுரம், சிதம்பரம் - 608 001.<br>Cell : 94862 23517 (W), 70100 41488 |
| விருப்பம் | சமபடிப்புடன் வெளிநாட்டில் பணிபுரிய விருப்பம் உள்ள வரன். |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி G. காவ்யா** |
| படிப்பு | B.Tech. (ECE) |
| பிறந்த தேதி | 11.06.2002 |
| உயரம் | 158 cm |
| நட்சத்திரம் | மிருகசீரிஷம் 3 பாதம் |
| கோத்திரம் | நெப்புக்குட |
| பூர்வீகம் | கண்ணாங்குடி (சிதம்பரம்) |
| தகப்பனார் | **S. கணேசன்,** ஆசிரியர் (ஓய்வு) |
| தாயார் | **V.T. சுமதி,** பட்டதாரி ஆசிரியை<br>பாய்லர் பிளாண்ட் ஆண்கள்<br>மேல்நிலைப் பள்ளி |
| முகவரி | B2/394F, BHEL Township.<br>Kailsapuram, Trichy - 620 014.<br>Cell : 94438 19110, 94438 60656 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி இர. யாழினி** |
| படிப்பு | B.E. (BioMedical Engg.) MBA., |
| வேலை | Sr. Executive, Olympus Medical System India Pvt. Ltd., |
| பிறந்த தேதி | 26.07.1999 |
| உயரம் | 5' - 5" |
| நட்சத்திரம் | மூலம் (3 ஆம் பாதம்) |
| கோத்திரம் | அரியலுட |
| பூர்வீகம் | பூச்சூட்டி - 609 811. |
| தகப்பனார் | **தி. இரமேஷ்** |
| தாயார் | **இர. மாலதி** |
| முகவரி | 47, சியாலேண்ட், 3வது தெரு,<br>இராமலிங்கம் நகர்,<br>மயிலாடுதுறை மாவட்டம் - 609 118.<br>Cell : 90955 86654, 9003 393874 |
| விருப்பம் | சமபடிப்பு, சென்னையில் பணியில் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி M.K. நித்திலா** |
| படிப்பு | B.Sc., Psychology, M.A., Criminology |
| வேலை | Assistant Manager,<br>WOORI BANK, Chennai |
| பிறந்த தேதி | 06.01.1999 |
| உயரம் | 153 cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | பனவுட |
| பூர்வீகம் | சித்தர்காடு |
| தகப்பனார் | **க. முத்துசங்கர்** |
| தாயார் | **பா. குந்தவி** |
| முகவரி | Flat A, Nutech Emerald,<br>798A, Paneerselvam Salai,<br>K.K. Nagar, Chennai - 600 078.<br>Cell : 94440 22285, 99629 22285 |

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் V. கார்த்திபன்** |
| படிப்பு | B.E. Computer Science & Engineering |
| வேலை | Senior Software Engineer,<br>Hexaware Technologies, Chennai |
| பிறந்த தேதி | 18.11.1996 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | அதுக்கனுட |
| பூர்வீகம் | கருவாழக்கரை, மேலையூர் |
| தகப்பனார் | **V. வெங்கடாசலம்** (LIC Advisor) |
| தாயார் | **V. தமிழ்ச்செல்வி** (இல்லத்தரசி) |
| முகவரி | 144, வண்டிக்கார தெரு,<br>லட்சுமி நகர், சித்தர்காடு,<br>மயிலாடுதுறை-609003.<br>Cell : 94431 09443, 94877 09443 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் அ. அரவிந்த் |
| படிப்பு | B.E., MBA (Business Analytics) |
| வேலை | Executive - Business Operations<br>Korcomptenz Inc. (IT), Chennai<br>Rs. 5.5 Lakhs / Annum |
| பிறந்த தேதி | 01.11.1998 |
| உயரம் | 186 cm |
| நட்சத்திரம் | உத்திரட்டாதி |
| கோத்திரம் | வில்வராய |
| பூர்வீகம் | முத்தியாபுரம் (கும்பகோணம்) |
| தகப்பனார் | கோ. அகோரமூர்த்தி<br>General Manager - Plants, Nigeria<br>(Daraju Group) |
| தாயார் | அ. ஜீவா Home Maker<br>(மணிக்கிராமம்) |
| முகவரி | F2, First Floor, Block 1,<br>Newbury Apartments,<br>Nagalingam Street,<br>Gowrivakkam, Chennai<br>Cell : +91 96989 64960 (Whatsapp)<br>+91 94865 10404<br>E-mail : agoramurthi@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் அஸ்வின் கார்த்திக் |
| படிப்பு | BE (CSC), MS (USA) |
| வேலை | Machine Learning Engineer,<br>Samsung, California (USA) |
| பிறந்த தேதி | 06.08.1996 |
| உயரம் | 5' - 11" |
| நட்சத்திரம் | பரணி |
| கோத்திரம் | குமாரக்குடை |
| பூர்வீகம் | திருநெல்வேலி |
| தகப்பனார் | Dr. சி. அம்பலவாணன், MD., |
| தாயார் | லட்சுமி பிரியா, B.Com., |
| முகவரி | சாய் பிரியா அப்பார்ட்மெண்ட்ஸ்,<br>4வது தளம், V. பிளாக் 107,<br>5வது மெயின் ரோடு, அண்ணா நகர்,<br>சென்னை - 600 040.<br>Cell : 73973 37203 |
| விருப்பம் | அமெரிக்காவில் மேல்படிப்பு படிக்கும் அல்லது வேலை பார்க்கும் மணமகள் தேவை. |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் A. பாலாஜி |
| படிப்பு | B.E. Mechanical (Nanyang Technological University, Singapore) |
| வேலை | Trainee Licensed Aircraft Engineer,<br>ST Engg Aerospace Services Company Ltd., Singapore<br>S$3250 + Perks |
| பிறந்த தேதி | 08.10.1999 |
| உயரம் | 182 cm |
| நட்சத்திரம் | உத்திரம் |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | மேலத்தெரு, இளந்தோப்பு, பட்டவர்த்தி |
| தகப்பனார் | R. ஆனந்த், Director - Sales,<br>Brightsun Marine Singapore |
| தாயார் | A. சசிகலா Home Maker<br>80, இராதாநல்லூர் |
| முகவரி | Blk 251, Jurong East Street 24,<br>#05-112, Singapore 600 251.<br>Cell : +65 81895059, +65 82924192,<br>+91 9884418881 |
| குறிப்பு | சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவர் |
| விருப்பம் | நன்கு படித்து பணியில் உள்ள பெண். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் கா. சக்தி விக்னேஷ் |
| படிப்பு | DEEE |
| வேலை | DAC Developers Pvt. Ltd.,<br>Electrical Engineer, Rs. 7,00,000/PA |
| பிறந்த தேதி | 17.09.1996 |
| உயரம் | 5' - 5" |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | ஆவுடை |
| பூர்வீகம் | சீர்காழி, ஆத்துக்குடி |
| தகப்பனார் | வே. கார்த்திக் பிள்ளை (லேட்) |
| தாயார் | கா. உஷா |
| முகவரி | பிளாட் எண்.S1,<br>டெக் ப்ரோமோட்டர்ஸ், நந்தவனம்,<br>அகஸ்தியர் தெரு, கிழக்கு தாம்பரம்,<br>சென்னை - 600 059.<br>Cell : 95001 99331 / 93455 87884 |
| விருப்பம் | Any Degree |



# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/11** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D., | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |
| **B 2/11** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம்பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | **07.05.98**<br>154 cm | B.Tech (CS) | Software Professional<br>EPSILON<br>Bangalore<br>Rs. 12 Lakhs/PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : **94447 11045, 99416 20355** |
| **B 3/11** செல்வி **R. சுவாதிகா**<br>மூலம் – 3ம் பாதம்<br>சென்னிமலையான்<br>பூர்வீகம் : கல்லக்குடி – டால்மியாபுரம்<br>விருப்பம் : பட்டம் பயின்று நல்ல வேலையில் உள்ள மணமகன் | **17.3.2001**<br>150 cm | B.E., (EEE) | | திரு. S. இராஜாராமன்,<br>**5,** கர்ணம் தெரு,<br>கல்லக்குடி – டால்மியாபுரம்,<br>லால்குடி Tk.,<br>திருச்சி Dt. **– 621 652.**<br>Cell : **99430 39473, 97877 83735** |
| **B 4/11** செல்வி **செ. அபிநயா**<br>மூலம் 3ம் பாதம்<br>காளிங்கராய<br>பூர்வீகம் : திருவிளையாட்டம்<br>விருப்பம் : B.E., அல்லது சம படிப்பு | **07.04.99**<br>170 cm | B.Com., MBA., | Executive - HR, HCL Technologies, Chennai | திருமதி. செ. கவிதா,<br>3/4, பெரிய தெரு,<br>அக்ரஹாரம், சேந்தங்குடி,<br>மயிலாடுதுறை **– 609 118.**<br>Cell: **94868 49107, 94436 05067** |
| **B 5/11** செல்வி **B. அனிதா**<br>மூலம் – 4ம் பாதம்<br>காலிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி<br>விருப்பம் : நன்கு படித்த பணியில் உள்ள வரன். | **12.11.99**<br>160 cm | B.Com., | | திரு. G. பாஸ்கர்,<br>மேற்கு தெரு, அருகேரி,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம் **– 606 105.**<br>Cell : **99769 64604** |
| **B 6/11** செல்வி **S. பரிபூரணி**<br>பூராடம் 4ம் பாதம்<br>குருகுலராய<br>பூர்வீகம் : ஆத்தூர் – சேலம்<br>விருப்பம் : சமபடிப்பு, அரசு வேலை | **01.04.97**<br>165 cm | M.Sc., Ph.D., (Agriculture) | Asst. Professor (Private Agri College) | திரு. K. செல்வம்,<br>**21/220,** காந்தி நகர்,<br>ஆத்தூர் **– 636 102.**<br>சேலம் மாவட்டம்<br>Cell : **94421 62145** |
| **B 7/11** செல்வி **R. ஆர்த்தி**<br>உத்திராடம்<br>நன்னுட<br>பூர்வீகம் : மேலையூர் | **28.03.92** | B.Tech., C.S., | IBM | திரு. N. Raju,<br>2/19, East Street, Melaiyur,<br>Karuvazhakkarai Post,<br>Mayiladuthurai Dt. - 609 304.<br>Cell : **98432 54986, 99435 16529** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/11** செல்வி **சி. இலக்கியா**<br>கேட்டை<br>கனகராய | **20.08.99**<br>160 cm | MCA | APS Engineering Projects P. Ltd., Chennai | திரு. N. சிவசுப்ரமணியம்,<br>மடத்துமணியம்,<br>**8,** வடக்கு மடவிளாகம்,<br>திருவிடைமருதூர் T.K. **– 612 504.**<br>Cell : **93440 53963** |
| **B 9/11** செல்வி **G. மகாலட்சுமி**<br>மகம்<br>கனகராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். | **15.11.95**<br>165 cm | B.E. (EEE) | Software Company | திரு. R. ஞானசம்மந்தம்,<br>No. 35, ஷர்மிளா அவென்யு,<br>விபிஷ்ணபுரம், அம்மாபேட்டை,<br>சிதம்பரம் **– 608 401.**<br>Cell: **99769 97310,90954 68213** (W) |
| **B 10/11** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : அரசு / வங்கி / IT துறையில் பணிபுரியும் வரன் | **09.09.98**<br>160 cm | M.E.(Ph.d.) | Asst. Professor (IT) Rajalakshmi Engg. College, Chennai | திரு. P.G. ராமமூர்த்தி,<br>ராணி மெடிக்கல்ஸ்,<br>**150,** மெயின் ரோடு,<br>பெண்ணாடம் **– 606 105.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **99761 77910** |
| **B 11/11** செல்வி **C. ரம்யா (எ) ஆர்த்தி**<br>விசாகம் 1ம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : திட்டக்குடி<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | 11.7.2000<br>5' - 2" | B.Tech. | HCL சென்னை | திரு. R. சொக்கலிங்கம் பிள்ளை,<br>**4/20,** கேசவன் காம்ப்ளக்ஸ்,<br>வண்டலூர் ZOO,<br>சென்னை **– 600 048.**<br>Cell : **97916 29435** |

## கவிதை

கல்வி கற்க காசில்லையே
என்ற கவலை'லே கடன் வாங்குறான்...
வேலை கிடைக்கல, கடன் அடைக்கல,
கவலை'ல குடிக்கறான்...
தொழில் செய்ய வாய்ப்பில்லையே
என்ற கவலை'ல் சீட்டாடுறான்...
உடம்பு இளைக்கணுமே என்ற நிலை'ல
ஊர் ஊரா சுத்தறான்...
உள்ளூரு கோ'ல் திருப்பணி நடக்க
வெளியூறு கோ'லுக்கு நடையா நடக்கறான்...
கைபேசியை எடுத்துகிட்டு இருசக்கர
வாகனத்துல கழிப்பிடம்போக
காலை'ல தோப்பு–துறவுக்கு போறான்...
ஊழல் அரசியலை நாட்டைவிட்டு விரட்ட
நோட்டை வாங்கி ஓட்டு போடறான்...
கூழ்குடித்த அப்பாவின் நினைவில்
குவாட்டர் குடிக்கும் குடிமகன்...
மோர் குடித்த அம்மாவின் நினைவில்
பீர் குடிக்கும் சிட்டிசன்...
சீர் கொடுத்து வந்த மாப்பிள்ளை (?!)
பார் புகழும் குடியானான்...
கல்தோன்றி, மண்தோன்றா காலத்து
முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி...

## என் மனைவி

பச்சை நிறப்புடவை கட்டி நின்றால் பரவசமா'டுவேன்!
சிவப்பு நிறப்புடவை கட்டி நின்றால் சிந்தை
குளிர்ந்திடுவேன்!
மஞ்சள் நிறப்புடவை கட்டி நின்றால் மகிழ்ந்து
குதித்திடுவேன்!
நீல நிறப்புடவை கட்டி நின்றால் மகிழ்ந்து நெஞ்சம்
குளிர்ந்திடுவேன்!
கறுப்பு நிறப்புடவை கட்டி நின்றால்
களிப்படைந்திடுவேன்!
இரண்டு கலர்ப்புடவை கட்டி நின்றால் இன்பம்
அடைந்திடுவேன்!
கத்திப்பூ கலர்ப்புடவை கட்டி நின்றால் பன்மடங்கு
மகிழ்ந்திடுவேன்!
பட்டுப்புடவை கட்டி நின்றால் பன்மடங்கு
மகிழ்ந்திடுவேன்
வெள்ளை நிறப்புடவை கட்டி நின்றால் மட்டும்
வேதனை அடைந்திடுவேன்!

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/11** செல்வன் **D. கல்யாணசுந்தரம்**<br>உத்திராடம்<br>காளிங்கராயர்<br>பூர்வீகம் : அருகேரி – பெண்ணாடம் | **22.09.96** | B.E.(Civil), | Junior Drafting Officer (JDO)<br>Government Staff<br>Near GH Trichy<br>Rs. 6,00,000/PA | திரு. G. துரைசாமி,<br>திருவள்ளுவர் தெரு,<br>பெண்ணாடம்<br>Cell : **97157 04601, 97157 04600** |
| **G 2/11** செல்வன் **K. மணிவேல்**<br>கேட்டை<br>முதனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/ பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன் | **15.02.93**<br>6' - 0" | B.E.,<br>(EEE), | Asst.<br>Commercial Tax<br>Rs 50,000/PM | திரு. T. கேசவன்,<br>5/234-2, நியூ அம்பேத்கர் நகர்,<br>ஜாகீர்ரெட்டிப்பட்டி,<br>சேலம் – **636 302.**<br>Cell : **94422 59692** |
| **B 3/11** செல்வன் **S. சிவசங்கர்**<br>சித்திரை 4ம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : மணலூர், விருத்தாசலம்<br>குறிப்பு : முதல் திருமணம் விவாகரத்து பெற்றவர் | **22.12.89**<br>5' - 7" | B.Tech.,<br>(Mech)<br>DAE | Quality Engineer<br>Die Tech<br>India Pvt. Ltd.,<br>Chennai<br>Rs. 35,000/PM | திரு. P. சிவக்குமார்,<br>21/5, பிள்ளையார் கோவில் தெரு,<br>மணலூர், 28வது வார்டு,<br>விருத்தாசலம் வட்டம்.<br>கடலூர் மாவட்டம் – **606 001.**<br>Cell : **97862 99310, 99526 38195 63695 32640** (W) |
| **G 4/11** செல்வன் **கு. ஸ்ரீ அஸ்வத்**<br>உத்திரட்டாதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : தகுதியான வரன்<br>குறிப்பு : ராகு, கேது உள்ளது | **11.11.97**<br>178 cm | B.E. (EEE) | System Engineer<br>Chennai<br>Rs 10,00,000/PA | திரு. கோ. குஞ்சிதபாதம்,<br>20/2, மேற்கு ரத வீதி,<br>பெண்ணாடம் – **606 105.**<br>Cell : **88705 55569, 98423 57920** |
| **G 5/11** செல்வன் **R. மணிகண்டன்**<br>சுவாதி<br>விச்சுட<br>பூர்வீகம் : கீழசெங்கல்மேடு, ஜெயங்கொண்டம் | **09.10.91** | | Quality Supervisor<br>சவூதி<br>Rs 24 Lakhs/PA | திரு. T. ரவீந்திரன்,<br>2/28, தெற்கு தெரு, கண்ணங்குடி,<br>சிதம்பரம்<br>Cell : **80566 59928, 63696 45450** |
| **G 6/11** செல்வன் **கோ. பாலாஜி**<br>அஸ்தம் – 3ம் பாதம்<br>காமகூட<br>பூர்வீகம் : சிறுவரப்பூர் – விருத்தாசலம் | **05.02.99**<br>178 cm | M.Tech., | Senior Engineer<br>Bangalore | திரு. பொன் கோவிந்தராஜன் பிள்ளை,<br>3/65A, சிவசக்தி நகர்,<br>மாப்படுகை,<br>மயிலாடுதுறை – **609 003.**<br>Cell : **88259 83906, 93609 26861** |
| **G 7/11** செல்வன் **G. விஜய்**<br>பரணி<br>எருக்கலுட<br>பூர்வீகம் : திருவாவடுதுறை<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **14.09.95**<br>180 cm | B.E.<br>(Mech.) | Business | திரு. G. கணேசன்<br>54, ராஜா தெரு, சுப்ரமணியபுரம்,<br>திருச்சி – **20.**<br>Cell : **75025 56085, 97883 77104** |
| **G 8/11** செல்வன் **K. சிவராமகிருஷ்ணன்**<br>புனர்பூசம்<br>களப்பாள<br>பூர்வீகம் : தாதம்பேட்டைபழூர் | **30.01.99**<br>175 cm | BPT - MPT<br>(Neuro)<br>Coimbatore<br>K.G. College | துறையூர்<br>Govt. of Tamilnadu<br>மாற்றுத்திறனாளிகள் நலத்துறை விழுதுகள் | திரு. B. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை,<br>264-1, கீழத் தெரு,<br>நாகமங்களம்,<br>அரியலூர் மாவட்டம் – **621 701.**<br>Cell : **91598 77759, 97868 83879** (W) |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/11** செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **21.06.99**<br>170 cm | B.Tech (ECE),<br>M.Tech (NIS) | Network Engineer<br>(RAN) LMJ<br>Innovations Amentum<br>Bengalure | திரு. குமார் (எ) சிவ. சிதம்பரம்,<br>1, பங்களா தெரு,<br>தேவானூர் சாலை,<br>விரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : **97873 10010, 91509 16765** |
| **B 10/11** செல்வன் **M. Sivasakthi**<br>Chittarai 1st Patham<br>Ogaluda<br>பூர்வீகம் : Kulumur, Sendurai T.K.,<br>விருப்பம் : Nallagunam any Degree | **30.12.99**<br>5' - 6" | B.Sc.,<br>HMCS | Dubai<br>60 to 75<br>Thousands | திரு. A. Muruganandamkalvi,<br>Durgaiyamman Koil Street,<br>Kulumur (PO), Sendurai (Tk),<br>Ariyalur (Dt.)<br>Cell : **63849 77560** |
| **B 11/11** செல்வன் **ச. ஆனந்தகுமார்**<br>உத்திரம்<br>ஆவுட<br>பூர்வீகம் : சிதம்பரம் | **23.03.97**<br>6' - 1" | BCA | Deputy Manager - Sales<br>DAC Developers<br>Pvt. Ltd.,<br>Rs. 10 Lakhs/PA | திரு. சந்தானம் பிள்ளை,<br>ஆனந்த பிரமிளம்,<br>4, காளிதாசர் தெரு,<br>கிழக்குத் தாம்பரம், சென்னை<br>Cell : **99408 61923, 95001 99331, 73582 23877, 89400 47753** |
| **B 12/11** செல்வன் **M. ஜீவானந்தன்**<br>கொத்தனுடை<br>ரேவதி | **23.12.93**<br>5' - 5" | B.E. (Mech) | Barga India<br>Pvt. Ltd.,<br>RS. 30,000/- | திரு. வி. முத்துமாணிக்கம் (Late),<br>திருமதி M. மோமதி,<br>1/52, நடுத் தெரு,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **87603 28544 / 96889 51044** |
| **B 13/11** செல்வன் **I. நடராஜன்**<br>விசாகம்<br>காலிங்கராய<br>பூர்வீகம் : கால்நாட்டம் புலியூர் (சிதம்பரம்)<br>(கானாட்டம் புலியூர்) | **23.3.2000**<br>5' - 6" | B.E., MBA., | HR Playroll<br>Private<br>Company<br>RS. 30,000/- | திரு. C.N. ஜயப்பன்,<br>T76, கம்பர் தெரு,<br>திருநகர், ஜாபர்கான்பேட்டை,<br>அசோக்நகர்,<br>சென்னை – 600 083.<br>Cell : **98652 18696 / 97909 04055 98402 71938** |

## தீபாவளி திருநாள்

இளம் விடியல் இன்பமாய் மலரும் முன்
குட்டிக் குருவியும், குயிலும் இன்னிசை முழங்க
கடிகார முட்கள் நானும், நானுமென இசைக்க
இளம் மொட்டுகள் மலரத் துடிக்க
தீபாவளித் திருநாள் இனிதே முகம் காட்ட
தீபத்திருநாளை மகிழ்ச்சியுடன் வரவேற்று
புத்தாடை உடுத்தி, இறைவனுக்குப் படைத்து
புஸ்வானத்தையும், சித்திரப் பூவாய் சிதறும்
மத்தாப்பு, சத்தமாய் வெடித்திடும் வெடிகளென
மலர்க் கூட்டமான குழந்தைகளுடன் குதூகலித்து
சங்கு சக்கரமாய் சுழலும் மழலைகளை ரசித்து
சரவெடிபோல் சிரித்து மகிழ்ந்து கொண்டாடி
இறைவனை நினைந்து இனிப்புகளைச் சுவைத்து
இன்பமாய் இல்லத்தாருடன் கலந்து மகிழ்ந்து
மகிழ்ச்சியில் திளைத்து தித்திப்பாய் தித்திக்கும்
மனத்துடனே கடந்து சென்ற தீபத் திருநாளே!
அடுத்த வருடம் உனது வரவை எதிர்நோக்கி
ஆவலுடன் காத்திருக்கிறோம்! வரம்
தருவாய் ஆண்டவனே!

– குருலட்சுமி ராஜன்,
வளையமாதேவி.
9715971257

## இந்தியாவில் வரி வகைகள் – பகுதி 1

## DIFFERENT TAXES IN INDIA

ஒரு நாள் மாலை கணினியில் இந்த கட்டுரையைத் தயார் செய்து கொண்டி ருந்தேன். அப்போது யாரோ என் பின்னால் வந்து நான் எழுதிக் கொண்டிருந்த கணினியில் தட்டச்சு செய்து கொண்டிருந்த கட்டுரையைப் படிப்பது தெரிந்து திரும்பிப் பார்த்தேன் பின்னால் நின்றிருந்த எதிர் வீட்டு சுவாமி நாதன், "என்ன வக்கீல் சார் சட்டம் பற்றி எழுதாமல் வரிகளைப் பற்றி எழுத ஆரம்பித்து விட் டீர்கள். எப்போது ஆடிட்டராக மாறினீர்கள் ?" என்று கேட்டுக் கொண்டே என் அருகில் வந்து அமர்ந்தார்

"அதெல்லாம் ஒன்றும் தொழிலை மாற்றிக் கொள்ள வில்லை. இன்று காலை எங்கள் ஊர் நண்பர் ஒருவர் வந்திருந்தார். அப்போது அவர் பேசும் போது சமீபத்தில் வீடு வாங்கிய அவர் மகன் இந்த வருடம் மட்டும் ,வீட்டுப் பத்திரத்துக்கான ஸ்டாம்ப் டூடி, வீட்டுக்கு கார்பரேஷன் வரி, கார் பெட்ரோல் இவைகளுக்கான விற்பனை வரி மற்றும் சம்பளத்துக்கான வருமான வரி என்று சுமார் இவ்வளவு ரூபாய் அரசுக்கு செலுத்தி உள்ளேன் என்று குறைபட்டுக் கொண்டான் . நம் நாட்டில் என்னென்ன வரிகள் தான் உள்ளன கொஞ்சம் சொல்லுங்களேன்" என்றார். அதற் காகத் தான் இந்த கட்டுரையைத் தயார் செய்து கொண்டிருந்தேன் . இதோ முடித்து விட்டேன். நீங்களும் கொஞ்சம் பாருங்களேன் என்றேன்.

நான் கண்ணாடி கொண்டு வரவில்லை. என்னால் படிக்க முடியாது நீங்களே சொல்லி விடுங்கள் வெட்டிப் பேச்சு பேசாமல் உருப்படியாக ஏதாவது கேட்டு விட்டுச் செல்கிறேன் என்றார். அவருக்கு நான் சொல்ல ஆரம்பித்தேன்.

### துவாதசி சமையல்

ஏகாதசி விரதம் இருப்பவர்கள் அன்றிரவு முழுவதும் தூங்காமல் இருந்து விட்டு மறு நாள் துவாதசி அன்று குளித்து விட்டு 21 வகைக் காய்களை போட்டு சாம்பார் வைத்து பிற்கு 3 அல்லது 4 கறி கூட்டு வகைகள் வைத்து சமைத்து சுவாமிக்குப் படைத்து விட்டு பிறகு உண்பார்கள். அதே போல் இப்போ தெல்லாம் திருமண விருந்துகளில் 20 வகைகளுக்கு மேல் போட்டு வருபவர்கள் முழுவதும் சாப்பிட இயலாமல் திருமண வீட்டுக்காரருக்கும் பெரும் செலவு வைக்கிறார்கள் . அதற் கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் நமது இந்திய அரசும் ஏறத் தாழ 25 வகை வரிகளை நம்மிடம் இருந்து வசூலிக்கிறார்கள் . 25 வகை என்று எனக்குத் தெரிந்தவரை சொன்னேன் . தணிக்கையாளர்களை கேட்டீர்களானால் அவர் இதை விட அதிகமாகவும் கூறக் கூடும்.

### எதற்காக வரி வசூலிக்கப்படுகிறது ?

இந்தியக் குடி மக்களி டமிருந்தும் சில நேரங்களில் இந்தியாவுக்கு வரும் வெளி நாட்டவர்களிடமிருந்தும் இந்தியாவில் செயல் படும் நிறுவனங்களிடமிருந்தும் மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் உள் துறை நிர்வாகங்களும்இத்தகையவரிகளை வசூலிக்கின்றன. அவ்வாறு வசூலிக்கும் தொகை நாட்டின் கட்டமைப்பு மற்றும்மேம்பாட்டு செலவுகளுக்கும்,நாட்டைக் காக்கும் இராணுவத்துக்குத் தேவையான தளவாடங்கள் வாங்குவதற்கும் மற்றும் பல நலத் திட்டங்களுக்கும் செலவழிக்கப் படுகின்றன அதைத்தான் வரிகள் கட்டப்படுகின்றன , நாடுகள் உருவாக்கப்படுகின்றன " Taxes are paid , nations are made" என்று சொல்வார்கள்.

### வரி வகைகள்

வசூலிக்கப்படும் வரிகள் நேரடி வரி மற்றும் மறை முக வரி என இரண்டு வகைப்படும் நேரடி வரி என்பது நாமே நேரடியாக அரசிடமோ சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலோ செலுத்துவது. மறைமுக வரி என்பது நம்மை அறியாமலே நாம் செலுத்தும் வரி அதாவது நம்மிடம் அந்த வரியை வசூலிப்பவர்கள் அதனை அரசுக்கு செலுத்துவார்கள் உ–ம் விற்பனை வரி முதலில் நேரடி வரி வகைகளைப் பார்ப்போம்.

### நேரடி வரிகள்

#### 1. வருமான வரி

எல்லோருக்கும் தெரிந்த வருமான வரி. ஒவ்வொரு குடிமகனின் ஆண்டு வருமானமும் வரி செலுத்த வேண்டிய வரம்புக்குள் வந்தால் தற்போது மூத்த குடி மக்களுக்கு ரூ 3 லட்சமும் மற்றவர்களுக்கு ரூ 2.5 லட்சமும் அந்தந்த ஆண்டுக்குள்ள விகிதாச்சரப்படி வருமான வரி செலுத்த வேண்டும். சில வகை முதலீடுகளின் மூலம் செலுத்த வேண்டிய வருமான வரியைக் குறைக்கலாம்.

#### 2. முதலீட்டு லாப வரி

நம்முடைய அசையா சொத்து மற்றும் பங்குகள் போன்ற வற்றை விற்றோமானால் கிடைக்கும் லாபமே முதலீட்டு லாப வரி. அது எவ்வாறு கணக்கிடப்படுகிறது வரி எவ்வளவு என்ற விபரங்களை எல்லாம் நான் ஏற்கனவே எழுதியுள்ள முதலீட்டு லாப வரி என்ற கட்டுரையில் விரிவாகக் கூறியுள்ளேன்.

#### 3. பிணை ஆவணங்கள் மாற்ற வரி – Securities Transaction Tax

மேலே சொல்லப்பட்ட முதலீட்டு லாப வரி என்பது அசையா சொத்து விற்பது மற்றும் நிறுவன பங்குகள் மற்றும் பரஸ்பர நிதி போன்ற பிணை ஆவணங்களை

பங்குச் சந்தையில் விற்பதில் வரும் லாபத்தில் வசூலிப்பது . ஆனால் பெரும்பாலானவர்கள் அந்த வரி கட்டுவதைத் தவிர்க்க பங்குச் சந்தையில் கிடைக்கும் உண்மை யான லாபத்தை தெரிவிப் பதில்லை. அதனால் அரசு செக்யூரிடி ட்ரான்சாக்ஷன் டாக்ஸ் என்னும் பிணை ஆவணங்கள் மாற்ற வரி என்ற வரியை அறிமுகப்படுத்தியுள்ளது STT Securities Transaction Tax. பங்குச் சந்தையில் ஒவ்வொரு முறை பங்குகள் மாற்றப்படும் போதும் இந்த வரி பொருந்தும். அதாவது பங்குச் சந்தையில் நீங்கள் ஒரு பங்கையோ பரஸ்பர நிதி போன்ற இதர ஆவணங் களையோ வாங்கினாலும் விற்றாலும் இந்த வரி செலுத்தப்பட வேண்டும். இந்த வரியானது பங்கு பரஸ்பர நிதி போன்ற அத்தகைய ஆவணங்களின் விலையோடு சேர்ந்து விடும் இந்த வரி மிகவும் குறைவானது என்பதால் இது மக்களின் கவனத்துக்கு அந்த அளவிற்கு வரவில்லை.

### 4 இடை ஆதாய வரி – Perquisites Tax

இந்த இடை ஆதாய வரி வருவதற்கு முன்பாக ஃப்ரிஞ்ச் பெனிஃபிட் டாக்ஸ் சிறிய நன்மை வரி என்று இருந்தது. 2009 ஆம் ஆண்டில் அது நீக்கப்பட்டது. இப்போது உள்ள இடை ஆதாய வரி என்பது, நிறுவனம் தனது ஊழியர்களுக்குக் கொடுக்கும் இதர பலன்களுக்கான வரி. அதாவது பணமாகக் கொடுக்காமல் இதர நன்மைகளைக் கொடுப்பது உ–ம் ஓட்டு நருடன் கார் கொடுத்தல், பொழுது போக்கு சங்கங்களில் உறுப்பினராக்குதல் போன்ற ஆதாயங்களுக்கான வரி .

### 5 பெரு நிறுவனங்களுக்கான வரி

கார்பொரேட் டாக்ஸ் எனப்படும் இந்த வரி இந்தியாவில் செயல் படும் பெரு நிறுவனங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுவது. அவ்வாறு வரி விதிப்பதற்கு இந்தியாவில் செயல் படும் பெரு நிறுவனங்கள் உள் நாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளி நாட்டு நிறுவனங்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு வரி விதிக்கப்படும்.

### மறை முக வரிகள்

நாமே நேரடியாக செலுத்தும் நேரடி வரி பற்றி இது வரை பார்த்தோம் இனி நம்மிடமிருந்து வசூல் செய்து மற்றவர்களால் கட்டப்படும் மறைமுக வரி பற்றிப் பார்ப்போம்.

### 6. விற்பனை வரி

அசையும் பொருள்களின் விற்பனையின் போது வசூலிக்கப் படுவதே விற்பனை வரியாகும், ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்கு விற்கப்படும் இண்டர் ஸ்டேட் பொருள்களுக்கு மத்திய அரசு விற்பனை வரி விதிக்கும் ஆனால் ஒரு மாநிலத்துக் குள்ளேயே விற்கப்படும் பொருள்களுக்கு அந்தந்த மாநிலங்களே விற்பனை வரியை விதிக்கும். இப்போது அது வேட் எனப்படும்மதிப்பு கூட்டு வரி என அழைக்கப்படுகிறது.

விற்பனையை மூன்று வகையாகப் பிரிக்கலாம் 1 ஒரு மாநிலத்துக்கும் இன்னொரு மாநிலத்துக்கும் இடையே நடக்கும் விற்பனை. 2 ஏற்று மதி / இறக்குமதியின் போது ஆகும் விற்பனை 3 ஒரு மாநிலத்துக்குள்ளேயே நிகழும் விற்பனை. மாநில அரசைப் பொறுத்த வரை அந்த மாநிலத்துக்குள்ளேயே நிகழும் விற்பனைக்குத் தான் அது வரி விதிக்க முடியும்.

சி எஸ் டி எனப்படும் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் என்னும் மத்திய விற்பனை. அதில் C படிவம் பெறப்பட்டால் விற்பனை வரி 2 வசூலிக்கப்படும். சி எஸ் டி எனப்படும் மத்திய விற்பனை வரி மத்திய அரசால் விதிக்கப்பட்டாலும் அதில், வசூலாகும் நிதி மாநில அரசுக்கே செல்லும் அதாவது எந்த மாநிலத்திலிருந்து பொருள் விற்கப்படுகிறதோ அந்த மாநிலம் அந்த வருவாயைப் பெறும் இந்த வரி மாநில அரசால் நிர்வகிக்கப்படுகிறது.

### 7. சேவை வரி

பணம் கொடுத்துப் பெறப்படும் பெரும்பாலான சேவைகளுக்கு நாம் சேவை வரி கட்ட வேண்டும். இந்த சேவை வரி கடந்த சில ஆண்டுகளில் பல புதிய சேவைகளுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது அவ்வாறு சேவை வரி கட்ட வேண்டிய சில முக்கியமான சேவைகள் வருமாறு :–

தொலை பேசி, சுற்றுலா நடத்துபவர்..கட்டிடக் கலைஞர், உள் அலங்காரம் செய்தல், விளம்பரம், அழகு நிலையம். சுகாதார மையம் வங்கி மற்றும் நிதி சேவைகள், நிகழ்ச்சிகள் நடத்துபவர்கள் பராமரிப்பு சேவை மற்றும் ஆலோசனை சேவை போன்றவை. தற் போதைய சேவை வரி 14.5 ஆகும் இந்த வரி நமக்கு சேவை செய்பவரால் நமக்கு திரும்ப அளிக்கப்படும்.

### 8. மதிப்பு கூட்டு வரி

ஒவ்வொரு மாநிலத்துக்கும் விற்பனை வரி என்பது ஒரு முக்கியமான வருவாய் ஈட்டும் வழியாகும் ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கென தனியான விற்பனை வரிச் சட்டத்தைக் கொண்டுள்ளன அதே மாதிரி ஒவ்வொரு மாநிலத்திலும் வரி விகிதம் மாறு படக்கூடும்.

அதே போல் பொருட்களின் மீது மத்திய அரசு விற்பனை வரி விதிப்பதே இப்போது வாட் எனப்படும் மதிப்பு கூட்டு வரி எனப்படுகிறது. மதிப்பு கூட்டு வரி என்பது

பொருளின் விலைக்கு மேல் சேர்க்கப்படுவது அது இறுதியில் பொருளை வாங்குபவருக்குப் போய்ச்சேரும் கிட்டத்தட்ட 220 க்கும் மேற்பட்ட பொருட்கள் இந்த மதிப்புக் கூட்டு வரி வரம்புக்குள் வருகின்றன . இந்த தலைப்பில் ஏற்கனவே ஒரு விரிவான கட்டுரை எழுதியுள்ளேன்.

**9. சுங்க வரி நகர சுங்க வரி பொருட்கள் மீது**

சுங்க வரி என்பது, வெளி நாட்டிலிருந்து இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது அரசு விதிக்கும் ஒரு மறைமுக வரி யாகும் இந்த வரி எப்போதும் அந்த பொருள் நம் நாட்டுக்கு உள்ளே வரும்போது அதாவது விமான நிலையம் அல்லது துறை முகம் போன்ற இடங்களில் வசூலிக்கப்படுவது, இந்த சுங்க வரி விகிதம் பொருளின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும்.

ஆக்டேரி வரி எனப்படும் நகர சுங்க வரி அத்தகைய வெளி நாட்டுப் பொருட்கள் நகராட்சி அல்லது அது போன்ற பகுதிக்குள் மக்கள் பயன்பாட்டுக்காகவோ அல்லது விற்பனைக்காகவோ கொண்டு வரப்படும்போது விதிக்கப்படுவது. சுருக்கமாகச் சொன்னால் இதை உள்ளே வருவதற்கான வரி என்று சொல்லலாம்.

**10. கலால் வரி**

கலால் வரி என்பது உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு போடப்படும் ஒருவகை வரியாகும். இது சுங்க வரிக்கு நேர் எதிரானது. அதாவது சுங்க வரி என்பது வெளி நாட்டில் உற்பத்தியாகி இந்தியாவுக்குள் கொண்டு வரும் பொருளுக்குப் போடுவது இந்த கலால் வரிக்கு சென்வாட் அதாவது சென்ட்ரல் வேல்யூ ஆடட் டாக்ஸ் என்னும் மத்திய மதிப்பு கூட்டும் வரி என்றும் பெயர் உண்டு.

இந்த வகை பொருட்களை நீங்கள் உற்பத்தி பண்ணினாலோ அல்லது உற்பத்தி செய்வதற்கு ஆட்களை நியமித்தாலோ நீங்கள் வரி செலுத்த வேண்டியிருக்கும்.

இந்தியாவில் உள்ள வரி வகைகளில் 10 வரை பார்த்திருக்கிறோம் மீதமுள்ள 15 வகை வரிகளை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

மணி எக்ஸெல். காம் இணையதளத்திலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

## நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சங்கம். கோயம்புத்தூர் இன்ப சுற்றுலா

இனிய இரவுப் பொழுதில் Aug. 28–ஆம் தேதி இரவு ரயிலில் 24 நபர்களுடன் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் அனைவரும் கூடினோம். 29–ம் தேதி காலை கோயம்புத்தூர் ரயில் நிலையம் சென்றடைந்தோம். உடன் எங்களை வரவேற்க S.M. Travals Van, Car உடன் Tamil Nadu Hotel க்கு அழைத்து சென்று காலைகடன்களை முடித்துவிட்டு Hotel Ananda's ல் அருமையான காலை உணவு கொடுத்து மலம்புழா அணைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அருமையான கேரள டீயை பருகி அணையை பார்வையிட வயதானவர்கள் ஒருவர் விடாமல் அனைவரும் குதூகலமாக புகைப்படம் எடுத்துக்கொண்டு இயற்கையும் எங்களுக்கு அழகாக காட்சியளித்ததோடு நன்கு ஒத்துழைப்பும் கொடுத்தது. (மழையில்லாமல்) அருமையான மதிய உணவுக்கு பின் மீன் Museum அனைத்து வகை மீன்கள் (உலகில் உள்ள) கண்களை கவர்ந்தது. அடுத்ததாக பாம்பு பண்ணையை பார்வையிட்டோம். அங்கு ராஜநாகம், மலைப்பாம்பு அரியவகை பாம்புகளை பார்வையிட்ட பிறகு ஈச்சனாரி பிள்ளையார் கோவில் சென்றடைந்தோம். அங்குபிள்ளையாருக்கு அபிஷேகம் முழுமையாக பார்த்து நன்கு வணங்கினோம் இரவு விடுதியில் தங்கினோம்.

மறுநாள் 30–ஆம் தேதி காலை காரமடை சுயம்பு பெருமாள் கோவிலுக்கு சென்று அருமையான தரிசனம் செய்துவிட்டு பரலிக்காடு சென்றடைந்தோம். அப்பப்பா, என்ன அழகு, எத்தனை அழகு 4 நபர்களாக பரிசலில் சென்றது கண்கொள்ளாக் காட்சி. இளையவர்களை உற்சாகப்படுத்த திரிபுரசுந்தரி பாட்டி அவர்கள் ஊஞ்சல் ஆடியும், பெண்கள் விளையாட்டும், அளவிளாவியும் மகிழ்ந்தோம். அங்கு மலை வாழ் மக்கள் அவர்களே தயாரித்த கம்பங்கூழ், கீரை, ஊறுகாய், இனிப்புகளுடன் மதிய உணவு சாப்பிட்டோம். மலைவாழ் மக்களின் நடனம் அருமையாக இருந்தது. அங்கிருந்து கிளம்பி வன பத்திரகாளியம்மனை தரிசித்தோம். பிறகு தென் திருப்பதிபெருமாளை வணங்கிபிரசாதம்சாப்பிட்டோம். அங்கு லட்டு பிரசாதம் வழங்கி அனைவருக்கும் நம் அண்ணன் திரு. தில்லை கோவிந்தன் அவர்கள் அன்புடன் வழங்கினார்.

31–ம் தேதி காலை பேரூரில் அமைந்துள்ள அருள்மிகு பச்சைநாயகி அம்மனை தரிசித்தோம். அங்கிருந்து புறப்பட்டு ஈஷா யோகா மையம் சென்று ஆதியோகி சிலையை கண்டுகளித்து, மருதமலை முருகனை தரிசித்து வந்தோம்.

மதிய உணவுகளுக்கு பிறகு பெரிய கடைவீதி டவுன்ஹால் சென்று அங்குள்ள கடைகளில் தேவையானவற்றை வாங்கிகொண்டோம். பிறகு அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலில் அம்மனை தரிசித்தோம்.

கோயில் வளாகத்திலேயே நமக்கு சிறப்பாக சுற்றுலாவை ஏற்பாடு செய்த SM Travels ஊழியர்களுக்கு சிறப்பு செய்து இரவு கோயம்புத்தூர் ரயில் நிலையம் சென்றடைந்தோம். மறுநாள் காலை அக்டோபர் 1–ம்தேதி சென்னைக்கு வந்தடைந்து, அவர் அவர்கள் மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தடைந்தோம்.

- Vijayal Mathivanan, Nanganallur.

## ஐந்தாய் அமைந்தவை

1) பஞ்சபுராணம் : தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம்.

2) பஞ்ச கங்கை : ரத்ன கங்கை, தேவ கங்கை, கயிலாய கங்கை, உத்ர கங்கை, பிரம்ம கங்கை.

3) பஞ்ச ரிஷிகள் : அகத்தியர், புலஸ்தியர், துர்வாசர், ததீசி, வசிஷ்டர்.

4) பஞ்ச குமாரர்கள் : விநாயகர், முருகர், வீரபத்திரர், பைரவர், சாஸ்தா.

5) பஞ்ச நந்திகள்: போக நந்தி, வேத நந்தி, ஆத்ம நந்தி, தர்ம நந்தி, மகா நந்தி.

6) பஞ்ச மூர்த்திகள் : விநாயகர், முருகர், சிவன், அம்பாள், சண்டிகேசுவரர்.

7) பஞ்சாபிஷேகம் : வில்வம் கலந்த நீர், ரத்தினங்கள் இடப்பட்ட நீர், பச்சைக் கற்பூரம், கிராம்பு, குங்குமப்பூ, விளாமிச்சை வேர் ஆகிய வாசனைப் பொருட்கள் கலந்த நீர், தர்ப்பைப்புல் இடப்பட்ட நீர், பழச்சாறு கலந்த நீர்.

8) பஞ்ச பல்லவம் : அரசு, அத்தி, வில்வம், மா, நெல்லி.

9) பஞ்ச இலைகள் : வில்வம், நொச்சி, விளா, மாவிலங்கு, கிளுவை.

10) பஞ்ச பூதங்கள் : நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்.

11) பஞ்ச உற்சவம் : நித்திய உற்சவம், வார உற்சவம், பட்ச உற்சவம் (மாதம் இருமுறை) மாதாந்திர உற்சவம், வருடாந்திர உற்சவம்.

12) பஞ்ச சபைகள் : ரத்தின சபை, கனக சபை, வெள்ளி சபை, தாமிர சபை, சித்திர சபை.

13) பஞ்ச சோபசாரம் : சந்தனமிடல், மலர்தூவி அர்ச்சித்தல், தூபமிடல், தீபமிடல், அமுதூட்டல்.

14) பஞ்சாங்கம் : திதி, வாரம், நட்சத்திரம், யோகம், காரித்வலம்.

15) பஞ்ச ஈஸ்வர்கள் : பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன்.

16) பஞ்ச கன்னியர்கள் : அகலிகை, திரவுபதி, சீதை, மண்டோதரி, தாரை.

17) பஞ்சபாண்டவர்கள் : தர்மன், அர்ச்சுனன், பீமன், சகாதேவன், நகுலன்.

18) பஞ்ச ஹோமங்கள் : கணபதி ஹோமம், சண்டி ஹோமம், நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம், ருத்ர ஏகாச ஹோமம்.

19) பஞ்ச வர்ணங்கள் : வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

20) பஞ்ச சுத்திகள் : ஆன்ம சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி.

21) பஞ்ச கோசம் : அன்னமய கோசம், பிராணமய கோசம், ஆனந்தமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம்.

22) பஞ்ச கவ்யம் (கோமாதா) : பால், தயிர், கோமியம், சாணம், நெய்.

23) பஞ்சலோகம் : தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு, ஈயம்.

24) பஞ்ச நதிகள் : ஜீலம், ராவி, சட்லெஜ், பீஸ் (பீயாஸ்), செனாப். (பஞ்சாப்)

25) பஞ்சா ஆயுதங்கள் : சங்கு, சக்கரம், கதை, வாள், வில்.

26) ஐவகை நிலங்கள் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

27) காப்பியங்கள் : மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, சிலப்பதிகாரம்.

28) ஐஞ்சிறு காப்பியங்கள் : நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், உதயன குமார காவியம், நாககுமார காவியம்.

29) பஞ்ச மகா பாதகங்கள் : காமம், கள்ளுண்டல், களவு, கொலை, சூது.

30) பஞ்ச மாலைகள் : இண்டை, தொடை, தொங்கல், கண்ணி, தாமம்.

பிடித்துப் படித்தேன், பகிர்ந்தேன்!

– கீரந்தங்குடி நீலா ராஜசேகரன்,

கும்பகோணம் – 2.

9751065491

# 11ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி




தோற்றம் :
10–04–1919

மறைவு :
24–10–2014

**அ. குஞ்சிதபாதம் பிள்ளை** ஆசிரியர் பணி நிறைவு
(குணமங்கலம், காட்டுமன்னார் கோயில் தாலுக்கா)

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
07–12–1938

மறைவு :
15–11–2023

திரு. **இரத்தின சபாநாயகம் பிள்ளை**
(ஆசிரியர் பணிநிறைவு)

கீழநத்தம் சிதம்பரம் தாலுக்கா

**என்றும் தங்கள் நினைவுடன் வாழும்**

**ம. ஞானசபாபதி** (ஆசிரியர் பணி நிறைவு)

**ச. ஞானஜோதி** (தலைமை ஆசிரியை)

பேத்திகள் : **Dr. ஞா. அபிநயசரஸ்வதி, ஞா. அமிர்தவர்ஷினி**

கொத்தவாசல், காட்டுமன்னார் கோயில், கடலூர் மாவட்டம். 608301 கைபேசி : 9442780675

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 18-8-1944



மறைவு : 20-11-2006

திருமதி. **K. கஸ்தூரி அம்மாள்**

*(ஆசிரியை ஓய்வு)*

கொத்தவாசல்

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 20-1-1924




மறைவு : 20-11-2004

திருமதி. **கு. ஞானம் அம்மாள்**


குணமாங்கலம்

தங்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

கொத்தவாசல், காட்டுமன்னார்குடி (Tk), கடலூர் மாவட்டம்



# சிறுவர் பகுதி




தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: **94437 00375**

Email: thiagu1943@gmail.com


செய்யத்தெரிந்தவன் சாதிக்கிறான். செய்யத்தெரியாதவன் போதிக்கிறான்.

**கடிகாரத்தின் மீது கவனம் வையுங்கள்!**



கடிகாரத்தின் மீது கவனம் வைத்து காலம் தவறாமையைக் கடைப்பிடித்த தலைவர்களில் தலைமையானவர் மகாத்மா காந்தி.தாம் மிக மதிக்கும் லோகமான்ய பாலகங்காதர திலகர் ஒரு கூட்டத்திற்குத் தாமதமாக வந்தபோது ...நமக்குக் கிடைக்கப்போகும் சுதந்திரம் அரைமணி நேரம் தாமதமானாலும் அதற்கு நீங்கள்தான் பொறுப்பேற்கவேண்டும் ...என்று கறாராகச் சொன்னார் காந்தி பிரார்த்தனைக் கூட்டங்களுக்குக்கூட அவர் தாமதமாக வருவதில்லை. ஒரே ஒரு முறை 1948 ஜனவரி 30 அன்று பிர்லா மாளிகையில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் சிறிது தாமதமாகக் கலந்துகொள்ள நேர்ந்தது.சர்தார் பட்டேலுடன் முக்கிய விவாதத்தில் ஈடுபட்டதால் கடிகாரம் பார்க்கத் தவறிவிட்டார் காந்தி.அவரது உதவியாளர் அபா,பாபுஜி...இன்று உங்கள் கடிகாரத்தை நீங்கள் பார்க்காதது குறித்து கடிகாரம் வருத்தப் படபோகிறது ....என்றார்.அது நிரந்தரமாக உண்மையாகிவிட்டது.காலம் என்பது மனிதன் வகுத்ததுதான் .ஆனால் அதன் அழுத்தம் மிக மிக வலிமையானது.உலகியல் வெற்றிக்கு மிக மிக முக்கியமானது.

**அண்டப்பொய், ஆகாசப்பொய் :**

இது என்ன அண்டப்பொய், ஆகாசப்பொய்? பொய்யில் வல்லவர்கள் மூன்றுபேர் சந்தித்தனர். அவர்களுக்குள் ஓர் போட்டி.அவர்கள் மூவரில் யார் அண்டத்தில் இல்லாத மிகப்பெரிய ஆகாசப்பொய் சொல்பவர் எனப் போட்டி. மிகச்சுருக்கமான வார்த்தைகள் கொண்டு மிகப்பெரிய பொய்யினைச் சொல்லவேண்டும் என்பதுதான்.

முதல் பொய்யன்: நான் காட்டின் வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். ஓர் அவரைக்கொடி தொங்கிக் கொண்டிருந்தது. அதனைப் பற்றிக்கொண்டு மேலே மேலே ஏறிச்சென்றேன். என்ன ஆச்சரியம்! சொர்க்கம் தெரிந்தது. தேவர்களையெல்லாம் சந்தித்துவிட்டு கொடி வழியாகவே கீழே இறங்கி வந்துவிட்டேன்.என்றான்.

இரண்டாவது பொய்யன்: நானும் காட்டின் வழியாகத்தான் போய்க்கொண்டிருந்தேன்.ஓர் சிங்கம் வாயைத்திறந்து என்னை விழுங்கிவிட்டது. அதன்வாயினுள் சென்ற நான் என் கத்தியால் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்துவிட்டேன்.என்றான்.

மூன்றாவது பொய்யன்: மிகச்சுருக்கமாக இரண்டு பேர் கூறியதும் உண்மை. நான் நேரில் பார்த்தேன் என்று முடித்தான்.

**1. கணிதப்புதிர்:** ஒரு கோடு மட்டும் போட்டு கீழுள்ள சமன்பாட்டை சரி செய்க. $5 + 5 + 5 = 550$

**2.கணிதப்புதிர் :**ரகுராமன் பிறந்தது பிப்ரவரி 29ம் தேதி 2001ம் வருடம்.அவர் பிறந்த தேதி எந்தக் கிழமையில் வரும்?



**3.மூளைக்கு வேலை:** உங்களிடம் ஒரு கேக் உள்ளது. இதனை 8 சம துண்டுகளாக போடவேண்டும். நிபந்தனை 3 முறைதான் கட் செய்யவேண்டும்.

**குறள் 127: யாகாவார் ஆயினும் நாகாக்க ;காவாக்கால்**
**சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு .**



ஒருவர் எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கு ஒன்றையாவது தீய சொற்களைப் பயிலாமல் அடக்கியாள வேண்டும் .அங்ஙனம் அடக்கியாளா விட்டால் பேசும்போது சொற் குற்றத்திற்கு ஆளாகிப் பெரிதும் துன்பப் படுவர்.



எண்ணமே வாழ்க்கை

எண்ணத்தின் வெளிப்பாடே வாழ்க்கை. விதை எப்படி தண்ணீர் விட்டவுடன் பூரித்து முளைவிடுகிறதோ அதேபோல எண்ணங்கள் மனதில் ஊறி வெளிப்படல் வேண்டும். இதற்கு நாம் உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். நமது எண்ணங்கள் கொள்கையைச்சுற்றி ஒரு ஆசையால் பின்னப்படுகிறது. எண்ணங்கள நெறிப்படுத்தப்படும்போது, ஒழுங்குபடுத்தப்படும்போது அது குறிக்கோளாகிறது. இலட்சியமாகிறது. குறிக்கோளுக்கு ஆசைக்குமேல் ஆசைவேண்டும். அதில் அதிகஈடுபாடுவேண்டும. நீருக்குள் அமுங்கியிருப்பவன் வெளியே வர எப்படித்துடிக்கிறானோ, அத்தகையத் துடிப்பை குறிக்கோளில் கொண்டிருக்கவேண்டும் என்பதாக சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். நமது மனம் ஒரு அசாதாரணமான இயக்கமுடையது. அதனிடம் ஒரு தெளிவான குறிக்கோளைக் கொடுத்துவிட்டால், மனதிற்கு உத்தரவு போட்டு விட்டோமானால் நிச்சயம் அது நம்மை அந்த ஊருக்கு அழைத்துச் சென்றுவிடும். மனம் என்றும் பொய்ப்பதில்லை. மன உறுதி இருந்தால், திட்டங்கள் இருந்தால் வாழ்க்கையை நாம் எண்ணுகிறபடி நாம் அமைக்கமுடியும். ஒரு கொள்கையை நோக்கி ஓயாது உழைத்தால் விதியை புறமுதுகிடச் செய்யலாம் என்பது வள்ளுவர் வாக்கு.

---

**விடுகதைகள்.**

1. பாயில் படுக்காமல் நோயில்லாமல் இளைக்கிறது. இது என்ன ?
2. இரவும் பகலும் ஒய்வு இல்லை. அவன்படுத்தால் எழுப்ப ஆளில்லை. அவன் யார் ?
3. வாலில் ஊசியுடன் திரியும் வம்பு டாக்டர். அவர்யார் ?
4. சிறகில்லாத பறவை ஊரெல்லாம் சுற்றும். அது என்ன ?
5. ஓடையில் ஓடாத நீர்,ஒருவரும் குடிக்காத நீர் ? என்ன நீர் ?
6. ஓட்டை வாய் உள்ளவனுக்கு விழுந்த பல் முளைக்கவே இல்லை. இது என்ன ?
7. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு. இது என்ன ?
8. குழந்தைக்கு எந்தக் கை பலமான கை ?
9. ஊரைச் சுமந்தபடி உயரத்தில் பறப்பான். அவன் யார் ?
10. கடித்தால் துவர்ப்பு, தண்ணீர்குடித்தால் இனிப்பு. இது என்ன ?
11. தலைக்குக் கவசம். உயிருக்குப் பாதுகாப்பு. அது என்ன ?
12. ஓசையிடுவான், உணவு சமைப்பான். அவன் யார் ?
13. பள்ளம் பார்த்தால் பாய்ந்து செல்வான். அவன் யார் ?
14. சடக்கென்று வருவான், சத்தமிட்டுப் போவான். அவன் யார் ?




---

**இந்தியாவைத் தெரிந்துகொள்ளுங்கள்**

1. இந்தியாவின் முதல் பெண்மணி குடியரசுத் தலைவரின் மனைவி.
2. இந்தியாவின் முதல் ஐ.பி.எஸ் அதிகாரி கிரண்பேடி (1972).
3. இந்தியாவைப்போல அகஸ்ட் 15ந் தேதி சுதந்திரதினம் கொண்டாடும் நாடு கென்யா.
4. இந்தியாவில் மதுவிலக்கை அமுல்படுத்திய முதல் முதலமைச்சர் ராஜாஜி.
6. இந்திய பசுமைப்புரட்சி விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன்.
6. இந்தியா முதன்முதலாகத் தயாரித்த முதல் போர்க்கப்பலின் பெயர்ஐ. என்.எஸ். ஆதித்யா.
7. இந்திய ஷேக்ஸ்பியர் எனப்படுபவர் காளிதாசர்.
8. இந்திய தேசியகீதமான ஜனகனமனபாடலை 52 வினாடிகளுக்குள் பாடி முடிக்க வேண்டும்.
9. இந்தியாவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கி கப்பலின் பெயர் ஐ.என்.எஸ்.சக்ரா
10. இந்தியாவில் மதுவிலக்கு சட்டத்தினால் ஏற்படும் இழப்பை சரிசெய்ய விற்பனை வரி அறிமுகப் படுத்தப்பட்டது.
11. இந்தியாவின் முதல் தபால் அலுவலகம் திறக்கப்பட்ட நகரம் சென்னை.
12. இந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்பட்ட நகரம் மும்பை.
13. இந்தியாவில் ஆங்கில கல்வி முறையை அறிமுகப்படுத்தியவர் பெண்டிங் பிரபு.
14. இந்தியாவில் அதிகம் கிடைக்கும் தாது நிலக்கரி.
15. இந்தியாவின் முதல் தனியார் ரேடியோ எஃப் எம் அலை வரிசை நிலையத்தின் பெயர் ரேடியோ சிட்டி.

**ஜோக்ஸ்**

1. ஆப்பரேஷன் பண்ணப்போன டாக்டர் மொபைல்ல வந்த மெசேஜ்ஜ பார்த்ததிலிருந்து ரொம்ப டென்ஷனா இருக்காரே ஏன் ?
   கத்திய எடுத்தவன் கத்தியாலதான் சாவான்னு நேரம்பாத்து எவனோ மெசேஜ் அனுப்பியிருக்கான்.
2. டாக்டர் நீங்க பெரிய சர்ஜனா இருந்தும் ஆப்பரேஷன் பண்றதைவிட மாணவர்களுக்கு க்ளாஸ் எடுக்கறதுலதான் ஈடுபாடு அதிகம்னு சொல்லறீங்களே ஏன் ?
   இங்கே ஒரே நேரத்துல நூறு பேரை அறுக்க முடியுமே!
3. எதுக்கு டாக்டர் காது ஓரத்தில வெல்லக்கட்டியை வெச்சிரிக்கீங்க ?
   காதிலே புகுந்த எறும்பு இப்போ வெளியே வந்துடும் பாருங்க...!
4. டாக்டர் ! நீங்க கொடுத்த மருந்து எந்தகடையிலயும் கிடைக்கலையே!
   அடப்பாவி ,பேனா எழுதுதான்னு கிறுக்கிப்பார்த்த சீட்டுய்யா இது!
5. என்னது அந்த டாக்டர் தினமும் ஆஸ்பத்திரிக்கு நடந்தே போறாரு!
   அவர் கால்நடை டாக்டராச்சே!

**எடக்கு மடக்கு கேள்விகளுக்கு பதிலை காரணத்துடன் கூறுக:**

1. சிறிய கார்தான் .ஆறுபேர் சேர்ந்துகூட பின்னால் தள்ள முடியவில்லை.ஏன் ?
2. சிறிய குடை என்றாலும் ஆறு குழந்தைகள் சென்றனர்.ஒருவரும் நனையவில்லை.எப்படி ?
3. அழகாக ஆடிக்கொண்டிருந்த மயில் பக்கத்துவீட்டில் முட்டையிட்டது.முட்டை யாருடையது ?
4. தாமரை இலை மீது தண்ணீர் நிற்காது.ஏன் ?
5. பக்கத்து வீட்டிலிருந்துவந்த வௌவால் என் வீட்டில் முட்டையிட்டால்.முட்டை யாருடையது ?
6. மெட்ரோ ரெயில் கிழக்கிருந்து மேற்கு நோக்கிச் சென்றால் புகை எந்தப்பக்கம் போகும் ?
7. ஊமை என்றாலும் நன்றாகப் பாட்டை ரசிக்கிறான்.எப்படி ?

**பணம்:**

வாழ்க்கையின் வசதிகளை வாங்குவதற்கான ஒரு கருவியே ஒழிய வாழ்க்கை முழுமைக்கும் மனிதனின் பணம் சம்பாதிக்கிற ஒரு கருவியாவது அசட்டுத்தனம். சம்பாதிக்கத் தெரிந்த மாதிரி செலவழிக்கவும் தெரிய வேண்டும்.வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட வயதில் பணம் சம்பாதிக்க ஆரம்பித்த மாதிரியே ஒரு குறிப்பிட்ட வயதில் சம்பாதிப்பதை நிறுத்திக் கொள்ளவும் தெரிதல்வேண்டும். கல்லறைக்குப் போகும்போதும் சில்லறை பற்றிய கவலையோடு போகக்கூடாது.

**அர்த்தமில்லாமல் பேசுவதற்கு வாரியார் சொன்ன கதை ஒன்று:**

இரண்டு முட்டாள்கள் சந்தித்தபோது முதல் முட்டாள் கேட்டார் உங்க குடும்பத்தில் யாரோ சமீபத்தில் இறந்துபோனதா சேதி வந்ததே...அது நீங்களா ? உங்கள் அண்ணனா ?
எனக்குத்தெரியலியே ...நான் வேணா அண்ணனைக் கேட்டு சொல்லவா ? இது இரண்டாம் முட்டாளின் பதில். இப்படி அர்த்தமில்லாமல் பேசுவது ஆபத்தானது. பின் விளைவு தெரியாமல் பேசுவது.

**சேகரியுங்கள் :**

அன்பின் மூலம் நண்பனை சேகரியுங்கள்.
குற்றங்களின் மூலம் நியாயங்களைச் சேகரியுங்கள்.
தவறுகளின் மூலம் அனுபவத்தைச் சேகரியுங்கள்.
கர்மத்தின் மூலம் ஞானத்தை சேகரியுங்கள்.
நண்பர்களின்மூலம் புத்தியைச்சேகரியுங்கள்.

**எப்படி இருந்தவர் இப்படி ஆகிவிட்டார்.**

1.ஜோசப் ஸ்டாலின் – செருப்பு தைத்துவந்தவராக இருந்தவர்.
2.அடால்ப்ஹிட்லர் – ஓவியராக இருந்தவர்.
3. கொலம்பஸ் – துணி வியாபாரம் செய்து வந்தவர்.

**இவர்கள் சொன்னார்கள் :**

1.கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்த ஒரு மனிதனும் அவரது இலட்சியத்தை அடையமுடியாது. – காமராஜர்
2.இந்த உலகமே உன்னைத் திரும்ப பார்க்கவேண்டுமென்றால் ,நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே – ஹிட்லர்
3.முடியாது என்று நீ சொல்வதையெல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்துகொண்டிருக்கின்றான். – அப்துல்கலாம்

**பதினாறு பேறுகள்**

அபிராமி பட்டர் பாடிய அற்புதமான பாடல் ஒன்றில் கீழ்க்காணும் பதினாறு பேறுகள் யாவை என அறியப்பட்டுள்ளன.இவற்றை அவர் அபிராமி அம்மையிடம் வேண்டுவதாக உள்ளது.

1.கலையாத கல்வி: வாழ்க்கையின் வெற்றிக்கு நமக்கு வழி காட்டக்கூடிய கல்வி.

2.குறையாத வயது : நீண்ட ஆயுள்

3.கபடு வராத நட்பு : நம்பிக்கைக்குரிய நல்ல நண்பர்கள்.

4.கன்றாத வளமை : நம்முடைய வளமான வாழ்க்கைக்குத் தேவையான பொருள்.

5.குன்றாத இளமை : உழைப்புக்குத் தளராத உடல் வலிமை.

6.கழுபிணியற்ற உடல் : நோயற்ற வாழ்க்கை.

7.சலியாத மனம் : எதற்கும் கலங்காத மனத்திண்மை.

8.அன்பகலா மனைவி : பெண்ணாக இருந்தால் அன்பகலாத கணவன்.

9.தவறாத சந்தானம் : அறிவு, ஆற்றல், ஒழுக்கம், ஆயுள் இவற்றில் தவறி விடாத குழந்தைகள்.

10.தாழாத கீர்த்தி : மென்மேலும் வளரக்கூடிய புகழ்.

11.மாறாத வார்த்தை : வாழ்வில் நேர்மை.

12.தடைவரா கொடை : நம் உழைப்புக்கான ஊதியம் தடங்கல் இல்லாமல் கிடைக்கும் வகை.

13.தொலையா நிதியம் : நம் உழைப்பால் ஈட்டிய பொருளை ஆடம்பரச் செலவுகளாலும் வீண் விரயங்களாலும் தொலைத்து விடாமல் விழிப்போடிருக்கும் சிக்கனம், சேமிப்புப் பழக்கம்.

14.கோணாத கோல் : நேர்மையும் திறமையும் கொண்ட நல்லாட்சி. ஆட்சி நன்றாக அமையாவிட்டால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போய்விடும்.

15.உதவிப் பெரிய தொண்டரோடு கூட்டு : நமக்குக் கை கொடுத்து வழிகாட்டி உதவக் கூடிய பெருமக்கள் தொடர்பு.

16.துய்யநின் பாதத்தில் அன்பு: இறையருளில் நம்பிக்கை, இறைவனிடத்திலும் இவன் படைத்த உயிர்களிடத்திலும் அன்பு.

இந்தப் பதினாறு பேறுகளிலும் தலையாய பேறு கலையாத கல்வி என்பதை சிந்தித்தல் வேண்டும். நமக்கு இந்த உலக வாழ்க்கை செம்மையாக அமைய தேவையானவை எவை என்பதையும் , எவ்வாறு பெறுவது என்பதனையும் தெளிவாக்குவது கல்வியே ஆகும். நம் வாழ்க்கையில் முயன்று பெறவேண்டிய முதலாவது கல்வி. இதன்வழி நடந்தோமானால் மற்றபேறுகள் தாமாகவே நம்மை வந்தடையும்.

---

**ஒன்றுமுதல் பத்துவரை எண்களில் பெயர்கள்கொண்ட ஊர்கள்.**

ஒண்ணுபுரம், இரண்டாம் கட்டளை, மூன்றடைப்பு, நாலு வேதபதி, அஞ்சு கிராமம், ஆறுபாதி, ஆறுகாட்டுத்துறை, ஏழுகிணறு, எட்டுகுடி, ஒன்பத்துவேலி, கோவில் பத்து.

---

**கவலைகள் :** வந்துகொண்டுதான் இருக்கும். அதை நிரந்தரமாக்குவதும். தற்காலிகமாக்குவதும் உங்களிடம்தான் உள்ளது. நிரந்தரமாக்கினால் நீ நோயாளி. தற்காலிகமாக்கினால் நீ புத்திசாலி.

---

**எடக்கு மடக்கு கேள்விகளுக்கு பதில்கள்:** 1. பின் வளைந்துவிட்டது 2. மழைபெய்யவில்லை 3.ஆண்மயில் முட்டையிடாது 4. தண்ணீருக்குக் கால்கள் இல்லை 5. வௌவால் முட்டையிடாது 6. மெட்ரோ ரெயிலில் புகை வராது 7. அவனுக்கு காதுகேட்குமே

---

**விடுகதை விடைகள்.** 1.சந்திரன் 2.இதயம் 3.தேள் 4.தபால் 5.கண்ணீர் 6.சீப்பு 7.இரத்தம் 8.அழுகை 9.விமானம் 10.நெல்லிக்காய் 11.ஹெல்மெட் 12.குக்கர். 13.தண்ணீர் 14.தும்மல்

---

**1. கணிதப்புதிர் :** 5 + 5 4 5 = 550

**2.கணிதப்புதிர் :**2001ம் வருடம் லீப் ஆண்டு இல்லை எனவே பிப்ரவரி 29ம் தேதி வராது.

**3.மூளைக்கு வேலை:** கேக்கினை முதலில் மேற்பக்கம் X வடிவத்தில் வெட்டிவிடவும். அடுத்து கேக்கினை குறுக்குவாட்டில் பக்கமிருந்து வெட்டினால் கேக் தற்போது 8 சம துண்டுகளாக இருக்கும்.



## சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் : பிரியா, கோமதி, மீனா, சித்ரா, வசுமதி, ஆண்டாள், தீபிகா, மீரா, கௌரி.**

**இடம் : பாம்குரோவ் ஹோட்டல்.**

சுமார் மாலை 4.30 மணி அளவில் தோழிகள் ஹோட்டலின் வரவேற்பு அறையில் குழுமினர்.

பிரியா : எல்லாரும் வாங்க! வாங்க! புது முயற்சியா, மழை என்பதால் ஹோட்டலில் meet பண்றோம். நன்றாக அமைகிறதான்னு பார்ப்போம்.

கோமதி : ஆமாம்பா! உள்ளே உட்கார்ந்து அரட்டை அடிக்க அனுமதிப்பாங்களா ?

மீனா : தெரியலை. ஆனா, நாம் ஏதாவது Snacks, Coffee யும் Order பண்ணி, அது வரும் வரையிலும் பேசுவோம்.

சித்ரா : வந்த பின்பும், சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்பா ! ஆனால் தீபாவளி பலகாரம் கொண்டு வந்து பகிர்ந்துண்ணலாம் என்றோம். அதை ரெஸ்ட்ராண்ட்டிற்குள் அனுமதிக்க மாட்டார்கள். அதனால் இங்கேயே அமர்ந்து taste பண்ணிட்டு, உள்ளே போகலாம்.

வசுமதி : ஆமாம்பா! Correct தான்! நான் நம்ம side திரட்டுப்பாலும், மகிழம்பூவும் கொண்டு வந்துள்ளேன்.

ஆண்டாள் : நான் அதிரசம், தேந்தலை.

மீரா : லட்டும், மிக்சரும் நான் கொண்டு வந்துள்ளேன்.

சித்ரா : நான் மக்கன் பேடாவும், ரிப்பன் பகோடாவும். மற்றவர்களும் லட்டு, பாதுஷா, அல்வா, காராசேவு என கொண்டு வந்திருந்தனர். வெளியே அமர்ந்து taste பண்ணினர்.

ஆண்டாள் : இங்கேயே இவ்வளவு சாப்பிட்டுட்டு உள்ளே போய் என்ன சாப்பிடுவது ?

பிரியா : சித்ரா, மக்கன் பேடா நல்லா இருக்கே ! எப்படி பண்றது ?

சித்ரா: அதுபாதுஷாவுக்குதங்கச்சி;குலோப்ஜாமுனுக்கு அக்கா. அவ்வளவுதான்.

மீரா : நல்லாருக்கே நீ சொல்றது. மைதா முக்கியம்கிறது தெரியுது.

சித்ரா : ஆமாம்க்கா! நான் குலோப்ஜாமுன் மிக்ஸ் வாங்கித்தான் பண்ணினேன். ஒரு pack mix வுடன், இரண்டு மேஜைக்கரண்டி (கூம்பாக) மைதா மாவு சேர்த்து சிறிது வெண்ணெய் (உப்பு போடாதது) மற்றும் புளிக்காத தயிர் கலந்து பிசைந்து, தண்ணீர் தெளித்து நன்கு அழுத்தி பிசையணும்; ஆனால் அடித்து பிசையக் கூடாது. ஒரு ஈரத்துணியில் போட்டு மூடி வைக்கவும். ஒரு அடி கனமான பாத்திரத்தில் 3 கப் சர்க்கரை, 3 கப் தண்ணீர் சேர்த்து பாகு காய்ச்ச வேண்டும். குலோப்ஜாமுன் பாகுவை விட மேலாக ஒரு லேசான கம்பி பதம் வரவேண்டும். பின் மாவை உருண்டைகள் (10) தட்டி, எண்ணெய் மிகவும் காயாமல், Gas ஐ sim ல் வைத்து போட்டு எடுத்து, ஓட்டை சட்டியில் வைத்து, பின் அவைகளைப் பாகில் போடுங்கள். இந்த 10 பேடாக்களைப் பாகில் போட்டதும், அடுத்த 10 பேடாக்களை எண்ணெயிலிருந்து எடுத்து சட்டியில் போட்டு, அதே போன்று பாகில் போடும் முன், பாகில் இருப்பவைகளைத் தட்டில் எடுத்து வைக்க வேண்டும். அவ்வளவுதான் !

பிரியா : என் பையன் Birthday வருது; அதற்கு செய்து விடுகிறேன்.

ஆண்டாள் : வருணபகவானோடு சேர்ந்து, தீபாவளி நன்றாக போய்விட்டது. அடுத்து கந்தசஷ்டி; சூரசம்ஹாரம், பெசன்ட்நகர் அறுபடை வீட்டில் சிறப்பாக நடைபெறுகிறது. ஆனால் இம்முறை கார்த்திகைத் திருநாள் டிசம்பர், 3–ஆம் தேதி வருகிறது. அதனால நவம்பர் முழுதும் ஒரு பண்டிகையும் இல்லை.

மீரா : அதனாலென்ன ? நவம்பர் 14th குழந்தைகள் தினம் வருகிறதே! நமது தேசத்தின் முதல் பிரதமர் பண்டிட் ஜவகர்லால் நேரு பிறந்த தினம். அவருக்கு குழந்தைகளென்றால் கொள்ளைப் பிரியம். அதனாலதான் அவரது பிறந்த நாளை குழந்தைகள் தினமாக கொண்டாடுகிறோம்.:

கௌரி : எங்க ஸ்கூல்லே, டீச்சர்ஸ் குழந்தைகளை மகிழ்விக்க Programme கொடுப்பாங்க! நல்லா enjoy பண்ணுவோம். X மற்றும் XII குழந்தைகளுக்கு மட்டும் School–ல் Special Lunch கொடுப்பாங்க! என்னால் மறக்க முடியாதது எங்கள் Social டீச்சர், சிறிது குண்டும், குள்ளமும். ஆனால் கொடி அசைந்ததும் காற்று வந்ததா ? என்ற பாட்டிற்கு அபிநயம் பிடித்தது இப்போதும் நினைவில் உள்ளது.

தீபிகா : இப்பெல்லாம் குழந்தைகளுக்குப் போட்டிகள் நடத்துகிறார்கள்.

வசுமதி : குழந்தைகள் என்றதும், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசத்தில் சுமார் 22 குழந்தைகள் கலப்பட இருமல் மருந்தினால் உயிரிழந்துள்ளது வருத்தத்தை ஏற்படுத்துகிறது. லாபம் கருதி யாராவது குழந்தைகள் உயிருடன் விளையாடுவார்களா ? கடந்த 6 ஆண்டுகளில் 120 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலப்பட இருமல் மருந்தினால் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடான காம்பியாவில் 70 குழந்தைகள் 2022–ல் இறந்திருக்கின்றனர். எத்திலீன் கிளைக்கால், டை எத்திலின் கிளைக்கால் கலப்படமே உயிரிழப்புக்கு காரணிகள்.

சித்ரா : மருந்துப் பொருட்கள் கரைவதற்கு புரோப்பலின் கிளைக்கால், கிளிசரின் சார்பிடால் போன்ற கரைப்பான்கள் சேர்க்கப்படும். இந்த கரைப்பான்களில் தவறுதலாக தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் டை எத்திலீன் கிளைக்கால் கலப்படமாக இருந்ததுதான் உயிரிழப்புக்கு காரணம். தப்பு செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என நம்புவோம்.

தீபிகா : ஜப்பானில் ஷின்ஷு பல்கலைக் கழக ஆய்வாளர்கள் வைரஸ் தாக்குதலுக்கு, தாவரங்களில் உள்ள சேர்மங்கள் தீர்வாகுமாவென ஆராய்ந்து வந்தனர். அவர்கள் ஏலக்காயில் உள்ள 1, 8 சினியால் எனும் சேர்மம் வைரஸ் கிருமிகளுக்கு எதிராக, நம்முடைய உடலில் இயற்கையாக உள்ள நோய் எதிர்ப்பு செல்களைத் தூண்டி வைரஸ் கிருமிகளைச் சுலபமாக அழிக்கின்றன என கண்டறிந்துள்ளனர்.

மீனா : ஏய்! நீ ஏலக்காய் என்றதும் எங்கள் பாட்டி வீட்டிலேயே தயாரிக்கும் ஒரு energy பானம் ஞாபகத்துக்கு வருது. சீரகம், ஓமம், லவங்கம், சுக்கு, மிளகு தனித்தனியாக ஒரே அளவில் எடுத்து வெறும் வாணலியில் வறுத்து, இத்துடன் பட்டை, ஏலக்காய் சிறிதளவு சேர்த்து சூடு ஆறியதும் அரைத்து, பொடியாக்க வேண்டும். மற்றவை 50 கிராம் எடுத்தால், பட்டை, ஏலக்காய் 5 கிராம் அளவில் தான் இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு முறை ½ தேக்கரண்டி தூளை, ½ லிட்டர் நீரில் கொதிக்க வைத்து பனங்கற்கண்டு சேர்த்து டீ போன்று ஒரு முறை குடிக்க, நாள் முழுக்க செரிமானம் நன்றாக இருப்பதுடன், புத்துணர்ச்சியுடன், எனர்ஜியும் கிடைக்கும்.

பிரியா : இந்த வருடம் பருவ மழை வெளுத்து வாங்குகிறது. தென்மேற்கு பருவ மழையே, வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும் நேரத்தில் தான் நமது தீபகற்பத்தில் இருந்து விடைபெற்றுள்ளது. நார்மலா மும்பையில் செப்டம்பர் முதல் வாரத்தில் முடிந்து விடும் சீசன் இம்முறை அக்டோபர் முதல் வாரம்தான் முடிந்துள்ளது.

கோமதி : இயற்கை அன்னை சீற்றமாகத்தான் இருப்பதாக தெரிகிறது. இந்தோனேஷியாவின் பாலி தீவில் கிழக்கு நூசா தெங்காரா மாகாணத்தில் 5,200 அடி உயரமுள்ள லெவோடோபிலகி லகி எரிமலை சமீப காலமாக அடிக்கடி வெடித்து வந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஒரு முறையும், அக்டோபர் 15–ஆம் தேதி 9 நிமிடங்கள் வெடித்து சிதறியது. 10 கி.மீ உயரம் வரை எரிமலை சாம்பலுடன், கரும்புகையும் எழுந்தது. எரிமலையைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வளையம் 7 கி.மீ தூரத்துக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாம்.

பிரியா : ரோபோக்களைப் பற்றி ஒரு செய்தி; ரோபோக்களால் ஒளி, ஒலி ஆகியவற்றை உணர முடியும். இப்போது சீனாவைச் சேர்ந்த பெய்ஜிங் தேசிய நானோ தொழில் நுட்ப மையம் கிராஃபீன் ஆக்ஸைட் அயனிகளைப் பயன்படுத்தி, சுவை அறியும் தன்மையை ரோபோக்களுக்கு கொடுத்துள்ளது. என்னெல்லாம் செய்றாங்க!

கோமதி : அது மட்டுமல்லப்பா! ரோபோக்களுக்கு மனித கரம் போன்ற ஒன்றை சீனாவின் வூஜிடெக் உருவாக்கி உள்ளது. 800 கிராம் எடையுள்ள இந்த உலோகக் கரத்தினால் சுமார் 10 கிலோ எடையைத் தூக்க இயலுமாம். இதன் விலை தோராயமாக4.84 லட்சம் ரூபாய் ஆகுமாம்.

கௌரி : இயற்பியலுக்கான நேபல் பரிசும்,வேதியலுக்கான நோபல் பரிசும் தலா மூன்று பேருக்கு கிடைத்துள்ளது. இயற்பியலில் for building Device Showing Quantum tunnelling க்காக ஜான் கிளார்க், மைக்கேல் H. டிவோரெட், ஜான் M. மார்ட்டினிஸ் என்பவர்களுக்கு கிடைத்துள்ளது. வேதியியலில் புதிய மூலக்கூறு கட்டமைப்பை உருவாக்கிய, ஜப்பானைச் சேர்ந்த 74 வயதான சுசுமு கிட்டகாவா ஆஸ்திரேலியாவின் 88 வயதான ரிச்சர்ட் ராப்சன், அமெரிக்காவின் 60 வயதான ஓமர்யாகி ஆகிய மூவருக்கும் கிடைத்துள்ளது.

சித்ரா : சரிப்பா! ஆறு போர்களை நிறுத்தி விட்டதால் அமைதிக்கான நோபல் பரிசை எதிர்பார்த்திருந்தார் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப். ஆனால் அவருக்கு கிடைக்கவில்லை.

ஆண்டாள் : ஆர்டர் பண்ண மினி இட்லியையும், குலோப்ஜாமுனையும் சீக்கிரம் முடிங்க; காபி ஆர்டர் பண்றேன். இனிமேல் ஹோட்டல் வேண்டாம்பா!

யார் வீட்டிலாவது சந்திப்போம். மந்த வெளியில் இருக்கும் எங்கள் வீட்டில் அடுத்த மாதம் சந்திப்போம். கோவில் பற்றி பேச வேண்டும் என மூன்று மாதமாக நினைத்திருக்கிறேன். அடுத்த மாசம் பார்ப்போம்.

பிரியா : சரிக்கா ! குழந்தைகளுக்கு, குழந்தைகள் தின நல்வாழ்த்துக்களையும், பெரியவர்களுக்கு கார்த்திகை தீபவொளி நல் வாழ்த்துக்களையும் கூறி விடைபெறுவோம்.

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் M.S.KABILAN |
| படிப்பு | B.E., MBA |
| வேலை | Team Lead- E-commerce, Chennai<br>Rs.6 Lakhs/PA |
| பிறந்த தேதி | 29.10.1995 |
| உயரம் | 180 cm |
| நட்சத்திரம் | Pooradam |
| கோத்திரம் | Eravuda |
| பூர்வீகம் | Perunchery |
| தகப்பனார் | V. Sivasubramanian (Consultant) |
| தாயார் | R. Mullai (Govt School Teacher)<br>Mayiladuthurai |
| முகவரி | Plot No.11, 11th Street, 6th Cross<br>Thendral Nagar East,<br>Thirumullaivoyal,<br>Chennai - 600 062.<br>Cell : 9791079181, 9444522460, 9486349064 / 9343597612 |




## CHENNAI KARKATHAR ASSOCIATION
## LADIES HOSTEL

No. 64, Sowrashtra Nagar 10th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Cell : 94454 82798, 99943 26976
E-mail : kaveri9941@gmail.com

- A/c. & Non A/c. Single Cot, Big Size Room
- Free Wi-Fi, Washing Machine, Aquaguard Water
- Two Wheeler Parking available
- Camera Facilities Available Inside & outside Area
- Security Persons available
- Three Times food, Breakfast, Lunch & Dinner
- Catering Available, 24 Hours warden available
- Food Timings : Morning 7.30 a.m. to 9.30 a.m.
  Lunch : 12.00 p.m. to 2.30 p.m.
  Dinner : 7.30 p.m. to 9.00 p.m.




| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வன் . P. ராகுல் |
| படிப்பு | : | B.E., M.Des., (NID, Gandhi Nagar - Gujarat) |
| வேலை | : | Principal Designer, AYA Design Studio, Chennai. |
| பிறந்த தேதி | : | 10.06.1999 |
| உயரம் | : | 175 Cm |
| நட்சத்திரம் | : | அசுவதி |
| கோத்திரம் | : | பூவனுட |
| தகப்பனார் | : | Dr.B. பொகுட்டெழினி, B.E., M.B.A.,Ph.D.,<br>H.O.D, Business Administration Dept.<br>ஞானாம்பிகை அரசினர் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை. |
| பூர்வீகம் | : | தாழஞ்சேரி , மயிலாடுதுறை Dt. |
| தாய் | : | P. சித்ரா, B.Sc., |
| பூர்வீகம் | : | காட்டுமன்னார்கோயில் |
| முகவரி | : | 7, ரோஜா தெரு, பெசன்ட் நகர், |
| | : | மயிலாடுதுறை-609 001. |
| செல் | | 9443489450 / 9442523135. |
| விருப்பம் | : | B.E., / B.Tech முடித்து சென்னையில் பணியில் உள்ள நல்ல வரன் |



# மணிவிழா



எனது அன்பு பெற்றோரும், மயிலாடுதுறை மாவட்டம் இலையமுதுகூடம் தெய்வத்திரு. M.S. சம்பந்தம் பிள்ளை – வேதநாயகி அம்மாள் அவர்களின் இளையமகன் திரு. **ச. இரத்தினவேல் சுப்பிரமணியன்** அவர்களுக்கும் மயிலாடுதுறை மாவட்டம், மணிக்கிராமம் திரு. R. ஞானசுந்தரம் பிள்ளை – தெய்வத்திரு. சீதாலெட்சுமி அம்மாள் அவர்களின் மூத்த மகள் திருமதி. **ஞா. குணச்செல்வி** அவர்களுக்கும் 08–10–2025 புதன்கிழமை அஸ்வினி நட்சத்திரம் கூடிய நன்னாளில் திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற மணிவிழாவிற்கு வருகை தந்து ஆசி வழங்கி / பெற்று சிறப்பித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– இர. அருள்குமரன்,**

**சி. சரண்யா அருள்குமரன்,**

**அ.ச. அனன்யா.**

# பீமரத சாந்தி







கடலூர் மாவட்டம் சி. வீரசோழகன் கூடலூட

தெய்வத்திரு. E. சீனிவாசன் பிள்ளை – சந்திரோதயம் ஆச்சி அவர்களின் மகன்

திரு. **அசோக்குமார் பிள்ளை** – திருமதி. **ஆண்டாள்**

அவர்களின் பீமரதசாந்தி விழா **21–10–2025** அன்று திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்து வாழ்த்திய, ஆசிபெற்ற நல் உள்ளங்களுக்கு எங்களது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**R. பரமசிவம் பிள்ளை,** **A. சக்திசீனிவாசன்**

**P. ஜெயலெஷ்மி,** **அருணா**

Master **சரவணன்** (எ) **கவின் நிலவன்**

திருச்சிற்றம்பலம்

# நூறாமாண்டு நினைவஞ்சலி

நீல மாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கோல மாமல ருந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
ஆலுஞ் சோலைநெல் வாயில் அரத்துறை அடிகள்தம்அருளே



தோற்றம்:
23.11.1925
பெண்ணாடம்

மறைவு:
26.11.1977
நெய்வேலி

## குருகுலராய **செ. இராதாகிருஷ்ணன் பிள்ளை** B.E. (Hons), FIE

அறிவு தனை அருளினால் அறிந்தவர்,
அன்பையே அறமாய்க் கொண்டவர்,

அண்ணாமலையில் பொறியியல்,
ஜெர்மனியில் தொழில் பயிற்சி அன்றே பெற்ற வித்தகர்,

மனித நேயத்தே மேலாண்மை செய்தவர்,
இன்பச்சமுதாயம் இனிது வளர என்றும் உழைத்தவர்,

சமரசம் உணரும் சாந்த சத்திய நெறியாளர்,
சைவ சித்தாந்தத்துடன் வள்ளுவம் வழி நின்றவர்,

சிவ தீக்கை பெற்று அநுட்டானம் அனுட்டித்து
சிவனைப்பேணி சீலமாய் வாழ்ந்தவர்,

மும்மலம் உணர்ந்து தன்முனைப்பகற்றி
தரணியில் மிளிர்ந்த பேரொளியே

தங்களது நூறாமாண்டு எங்கள் நினைவில் ,
தங்கள் நல்லாசி என்றும் வேண்டிடும்....

**மகள்கள் மருமகன்கள் பெயரன்கள் பெயர்த்திகள்**
மற்றும் **சுற்றமும் நட்பும்**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
22.5.1945

மறைவு
3.11.2022

## தெய்வத்திருமதி. M. வசந்தா

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும் இருந்து
மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து
விட்டாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை

என்றும் நினைவில் வாழும்

கணவர் **S. மாணிக்கம்**
புலவனூர், மயிலாடுதுறை மாவட்டம்
**99526 53813 / 80123 65908**

மகள்கள்
**R. உஷா**
**S. திலகவதி**
**B. ராஜேஸ்வரி**

மருமகன்கள்
**A. இராமலிங்கம்,** சென்னை
**K. சரவணன்,** Canada
**J. பாஸ்கர்,** சென்னை

பேத்தி – திருமதி **R. சுஷ்மிதா விஷாலினி,** B.Arch., KP&J Engineers Pvt. Ltd., Chennai
திரு. **S. முகுல் வசந்த்,** B.E., MBA., Infosys, Chennai
பேரன் – **S. ஹரி,** B.E., C.S. Engineer, Canada

# வருந்துகிறோம்

தோற்றம்
03.08.1943



மறைவு
17.07.2025

## A. பாலசுப்பிரமணியன்

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், கழனிவாசல் கிராமம்.

நேற்று நீங்கள் எங்களுடன் இருந்தீர்கள் ஆனால் இன்று உங்கள் நினைவுகளுடன் வாழ்கிறோம்.

நீங்கள் இல்லாத இடம் வெற்றிடமாக தெரிகிறது ஆனால் என்றென்றும் உங்களுக்கான இடம் எங்கள் இதயத்தில் இருக்கின்றது.

நீங்கள் இல்லாத வீட்டில் உங்கள் நினைவுகள் மட்டுமே உயிர்ப்புடன் இருக்கின்றது.

நீங்கள் பாசமிகு குடும்பத் தலைவராய் கடமையில் சிறந்த அதிகாரியாய் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் சிறந்த வழிகாட்டி மற்றும் ஆலோசகராக இருந்தீர்கள்.

நீங்கள் இந்த மண்ணுலகில் இருந்து மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களிலிருந்து என்றும் மறையாது

உங்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்துள்ள எங்களை இறைவனாய் இருந்து என்றென்றும் நல்வழி காட்டுமாறு இறைஞ்சுகிறோம்.

உங்கள் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.
மனைவி **ஜெயலட்சுமி**

மகன் **வேல்முருகன்**
மருமகள் **வித்யா**
பேத்தி **சிவரஞ்சனி**
பேரன் **ஆதி**

மகள் **பிரபாவதி**
மருமகன் **பாலச்சந்திரன்**
பேரன் **ஆகாஷ்** மற்றும் **சக்தி சௌமியா**
பேரன் **கைலாஷ்**


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th November 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

**We were privileged to host Thiru S. Saravanan, IAS, the esteemed Collector of Dindigul, during his stay at Hotel Kanakabhishegam and his gracious visit to our signature Amirtham Restaurant.**



**His presence was a true honor, reaffirming our commitment to hospitality. We extend our heartfelt thanks for choosing us**

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**